539

1539

...35 — மலர் 12—இதழ் 2

வருஷ சந்தா ரூ 1-8-0

ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்.

12-வது ஆண்டுப் பரிசுகள்: பிரவேசக் கட்டணமில்லை.

பொங்கிய காதல் : :

அல்லது

மங்களபாரதி

துப்பறியும் நாவல்

அதிகாரம்

5. அன்பின் சிகரம்—அணங்கின் துயரம்
6. அஞ்சா நெஞ்சம்—பஞ்சமா பாதகம்
7. எண்ணாத உதவி—புண்ணான இதயம்
8. யுவர்களின் கொண்டாட்டம்
   யுவதியின் திண்டாட்டம்

புதிய துப்பறியும் நாவல்

பட்டமோ பட்டம் : :

அல்லது **காலத்தின் கோலம்**

"ஜகன்மோகினி" ஆபீஸ்
...ரடித் தெரு,
...கேணி சென்னை

OFFICE OF THE REGISTRAR ... 7 MAR 1932 MADRAS

3C
M22.5M
M35.12.2.
182973

பன்னிரண்டாவதாண்டுக் கொண்டாட்டம்
50 ரூபாய் பரிசுகள்.

1935௵ பிப்ரவரி௴ 23௳க்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து, அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல் பரிசு ரூ. 15. 10 ரூபாயில் இரண்டு பரிசுகள்.

5 ரூபாயில் மூன்று பரிசுகள்.

ஏற்கெனவே நமது சந்தாதாரர்களாயிருப்பவர்கள், புதிய சந்தா சேர்த்துக் கொடுத்தால் அவர்களுக்கு வேண்டிய இனும் நாவலை (முதல் சஞ்சிகையில் தெரிவித்துள்ளபடி) அனுப்புவதுடன், அவர்களது நம்பர்களும் இந்த பரிசுப் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்.

புதிய துப்பறியும் நாவல்

பட்டமோ பட்டம் : : அல்லது காலத்தின் கோலம்

இந்த நாவல் வெகு துரிதமாக அச்சாகிக்கொண்டு வருகிறது. 15 தேதிக்குள் தயாராகிவிடும். இதற்காக முன்பண மனுப்பியவர்களுக்கு எமது வந்தனத்தை யளிப்பதுடன், இதர நேயர்களும் புதிய சந்தாக்களைச் சேர்த்தனுப்புகையில் இதன் விலையையும் சேர்த்தனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

ஏஜன்டுகள் உடனே தேவை

ஒவ்வொரு ஊரிலும் ஏஜண்டுகளை ஏற்படுத்தி, சஞ்சிகையை நேரில் கொடுக்க உத்தேசித்திருப்பதால், அங்குள்ள பிரபலமான பத்திரிகை ஏஜண்டுகளின் விலாசங்களை தயவு செய்து நமக்குத் தெரிவிக்கும்படி நமது சந்தா நேயர்களைகேட்டுக்கொள்கிறோம்.

வை. மு. பார்த்தசாரதி
காரியஸ்தன்,



—24-வது பக்கம் பார்க்கவும்.

5-வது அதிகாரம்

அன்பின் சிகரம்—அணங்கின் துயரம்

182973.

"உலகம் தோன்றிய நாள் முதல் இன்பம், துன்பம்; நன்மை; தீமை; சுகம், துக்கம்; ஜெயம், அபஜெயம்: சோதனை, வேதனை; ஆதரிப்பு, அநாதரிப்பு; ஆசை, அன்பு முதலிய யாவும் கூடவே தோன்றியனவல்லவா? அவ்வுலகத்தில் பிறந்த ஏனைய மக்களிடத்தும்—பொருள்களிடத்தும், ஜீவ

கோடிகளிடத்தும்—அந்த அமைப்பிற்கு—முறைக்கு, அழகிற்கு—ஏற்றவாறு அன்பும், ஆசையும் தாமாகவே இயற்கையினாலும் செயற்கையினாலும் உண்டாகி விடுகின்றன. ஆழ்ந்த அன்பிற்கு விலையே இல்லை; மதிப்பே இல்லை. அத்தகைய மதிப்பிலாத சகோதர அன்பில் கட்டுப்பட்டுக் கிடக்கும் பாரதியின் மனத் தவிப்பு கரை புரண்டோடியது.

பித்துக் கொண்டவள் போல " அண்ணா! அண்ணா! "என்று கத்தியவாறு வீதியில் அவனைப் பின் தொடர்ந்து ஓடுகிறாள். அக்கம் பக்கம் கூட்டம் அதிகரித்துவிட்டது. இரவு நேரமாகையால் சிலர் வீட்டில் நித்திரை போனவர்களும், சிலர் பேசிக்கொண்டும், சிலர் சீட்டாடிக்கொண்டும், சிலர் புராணம் படித்துக்கொண்டும் சிலர் கிராமபோன் பாட்டு வைத்து கேட்டுக்கொண்டும், சிலர் தாமே பாடிக்கொண்டும் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக இருக்கும் சமயம், "பிடியுங்கள். பிடியுங்கள்." என்ற குரல் கேட்டதையும், கூட்டங்கள் ஓடுவதையும் பார்த்த மற்றவர்களுக்குப் பயம் எடுத்துக்கொண்டது. 'திருடன்தான் வந்துவிட்டான்' என்று எண்ணி "எதோ! எதோ! அத்து படவாப் பயல்! திருட்டுப் பயல். ஓதை. குத்து." என்று கூவிக்கொண்டே தடியும் தாம்பும், கட்டையும் மட்டையும் அகப்பட்டதை எல்லாம் எடுத்துக்கொண்டு ஓடத் துடங்கிவிட்டார்கள்.

பெண்பிள்ளைகளெல்லாம் பயந்துகொண்டு வீதியில் காற்றுக்காகப் படுத்திருந்த கிழங்களையும், குழந்தைகளையும் எழுப்பி உள்ளே இழுத்துக் கொண்டுபோய் தள்ளிவிட்டு, வீதிக் கதவுகளை தாழ்ப்பாளிட்டுக்கொண்டு நடுநடுங்கியவாறு ஜன்னல்களாலும் கதவிடுக்குகளாலும் எட்டி எட்டிப் பார்க்கிறார்கள். தலைவிரி கோலமாக பாரதி ஓடுகிறதைக் கண்ட எவருக்குத் தான் மனங் கரையாது. பிடி பிடி என்று கூறுபவர்கள் யாரைப் பிடிப்பது என்று தெரியவில்லை. குழப்பம் அதிகரித்துவிட்டது.

மாசிலாமணி திடீரென்று மூளை கலங்கிப் போய் தாறுமாறாக ஓடி, ஒரு வீட்டினுள் புகுந்து அங்கு கிடந்த கல் தடுக்கித் தடாலென்று விழுந்தான். அந்த வீட்டுக்காரி " ஐயோ! திருடன் இதோ

வந்துவிட்டான். திருடன். திருடன்!" என்று பிரம்மாண்டக் கூச்ச லிடுவதற்குள் வீதியிலுள்ளவர்கள் உள்ளே ஓடி வந்தார்கள். தடியினால் அடிக்கத் தொடங்கு முன்னர் ஏற்கெனவே தலையில் கட்டுடன் விழுந்து கிடக்கும் மாசிலாமணியைக் கவனித்த ஒருவர் "திருடனா?" என்று பார்க்கையில் பாரதி, "ஐயோ! அவன் திருடனில்லை. அடித்துவிடாதீர்கள். நோயாளியாகிய எனது அண்ணன் மாசிலாமணி. அடிக்காதீர்கள்." என்று கத்திக்கொண்டே வருகையில் இந்த வீட்டில் கும்பல் சாய்வதால் அங்கு தானும் பெருங்கூச்சல் போட்டவாறு உள்ளே ஓடி வந்தாள். அதற்குள் விஷயந் தெரியாத சிலர் "அடிடா; உதைடா; கடவுள் கீழே தள்ளி தண்டித்தது போதாது" என்று கூறி, இரண்டு மூன்று அடிகளும் விட்டுவிட்டார்கள். பாரதி "ஐயோ! அடித்துக் கொலை செய்யாதீர்கள்." என்று விலக்கிக்கொண்டு ஓடிய பிறகுதான் இந்த உண்மை தெரிந்தது. எல்லோரும் வருந்திக் கண்ணீர் விட்டு "ஐயோ! மாசிலாமணியா ஓடி வந்து விட்டான்! என்ன காரணம்?" என்று வினவினார்கள்.

இதற்குள் சிலர் விவரங்களை விளக்கினார்கள். மாசிலாமணி விழுந்துவிட்டதால் இன்னும் பலமான காயங்கள் பட்டுவிட்டன. ஒரு வண்டியில் அவனைப் போட்டுக்கொண்டு வந்து வீட்டில் விட்டு, டாக்டரை வரவழைத்துச் சிகிச்சை செய்தாள். அது முதல் அவனுக்குச் சரியானபடி புத்தி ச்வாதீனமே கிடையாது. பித்துவதும் பேத்துவதும், எழுந்து எழுந்து ஓடப் பார்ப்பதும் இதே நிலைமையாகி விட்டது. ஜுரம் முதலியன நன்றாகக் குணமாகிவிட்டன. ஆனால் புத்தி தெளிந்த பாடில்லை. பாரதி என்ன செய்வாள் பாவம். திகிலும் பயமும் அதிகரித்துவிட்டன.

இங்கிருந்து பந்தாட்டத்திற்காகச் சென்ற ராஜசேகரன், மனம் முற்றும் இவ்விடமும், தேகம் அவ்விடமுமாக அலை பாய்ந்தபடியே போய்ச் சேர்ந்தான். ஸ்டேஷனில் அவனுடைய வரவை எதிர் பார்க்கும் நேயர்கள் மாலைகளும் புஷ்பச் செண்டுகளும் வைத்துக்கொண்டு "பந்தாட்ட வீரன் வருகிறான். பெரும் சாம்பியன் வருகிறான்." என்று ஆவலுடன் எதிர் பார்த்து ரயில் வரும் திக்கையே நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

ராஜசேகரன் மனம் ஓரிடத்திலும், காயம் ஓரிடத்திலுமாக விருப்பதால் ஏதேதோ எண்ண மிட்டவாறு வருவதாலும், இரவு பகல் கண் விழித்ததாலும், தேகம் மெலிந்து பித்தன் போலாய்விட்டான். ஸ்டேஷனில் தன்னை வரவேற்க இத்தனை பெரிய கூட்டங் கூடி இருக்கும் என்று அவன் நினைக்கவில்லை யாதலால் ஏதோ போக்காகவே இருந்துவிட்டான். ஸ்டேஷன் வந்ததும் தலையை நீட்டிப் பார்த்தால் ஏக கூட்டமாகக் காணப்பட்டது. "அதோ ராஜசேகரன்! அதோ சாம்பியன்! அதோ பந்தாட்ட வீரன்!" என்று ஜனங்கள் கூறும் வார்த்தைகள் காதில் விழுந்த பிறகே தனக்காகத் தான் இத்தனைக் கூட்டங்களும் காத்திருப்பதை யறிந்தான்.

ஆடம்பர மின்றிச் சாதாரண உடையுடனும், நகைத்த முகத்துடனும், கம்பீரமான பார்வையுடனும் இறங்கிய ராஜசேகரனை ஜனங்கள், ஈ எறும்பு சுற்றிக்கொள்வது போல சுற்றிக்கொண்டு கை குலுக்குவதும், மாலை போடுவதும், பன்னீர் தெளிப்பதுமாக ஆரவாரம் செய்கிறார்கள். இம்மாதிரியான சம்பவங்கள் ராஜசேகரனுக்குப் புதிதல்லவாயினும் அவனுடைய தற்போதைய மன நிலைமையில் இதுவரையில் பந்தாட்டத்தைப் பற்றி நினைக்காமலேயே இருந்துவிட்டதனால் அவனுக்கு திடீரென்றுதான் புதிய ஓர் உணர்ச்சி கிளம்பியது. தான் இத்தகைய கலவரத்திலிருந்தால் இச் சமயம் ஆட்டத்தில் தோல்வி யடைந்து விடுவோம் என்ற எண்ணம் உதித்ததால் தன் மனக் கலக்கங்களை சமாளித்துக்கொண்டு, எல்லோருக்கும் பிரதி வந்தனஞ் செய்து, கை குலுக்கி மலர்ந்த முகத்துடன் காட்சி கொடுத்தான்.

இவனை வரவழைத்த பெரியாரும் "ராஜசேகரா! இந்த ஊரில் நாளைக்கு வரும் பந்தாட்டக் கட்சியாருடன், உன்னைச் சேர்த்துக் கொண்டு ஆடி ஜெயிக்க வேண்டும் என்று பலர் விரும்பியதால் நான் உனக்குத் தந்தி யடித்தேன். நாளைய தினம் ஆட்டம் ஆரம்பம். இப்போது வரவேற்பு மாலை. நாளைய தினம் ஸென்சரி மாலையும் வெற்றி மாலையும் சூடவேண்டும்." என்று தட்டிக் கொடுத்துக் கூறினர். அங்குள்ள ஜனங்களுக்கு உள்ள சந்தோஷத்தைக் கூற

முடியவில்லை. பிறகு எல்லோரும் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டார்கள்.

ராஜசேகரனை வரவழைத்தவரே கூட அழைத்துச் சென்று தன்னோடு வைத்துக்கொண்டார். அன்று முற்றும் இவனைப் பார்க்க வரும் கூட்டங்கள் கணக்கே இல்லை. எல்லோருடனும் வெகு உத்ஸாகமாகப் பேசி மகிழ்வித்தான். எனினும் அடிக்கடி மனம் மின்சார சக்தி தாக்குவது போல வாணீபுரத்திற்குச் சென்று ஒரு சுற்று சுற்றிக்கொண்டு தத்தளிப்புடன் திரும்புகிறது. அச் சமயங்களில் மட்டும் ஏதோ பித்து பிடித்தவன் போலாய் விடுகிறான்; எனினும் தன் மாறுதலைப் பிறரறியாவண்ணம் வெகு சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டான்.

பந்தாட்டத்திற்காக அமைத்துள்ள மைதானத்தில் ஆயிரக் கணக்கான கூட்டங்கள் தேர் திருநாள் போலக் குழுமி விட்டார்கள். போட்டோ படம் எடுப்போரும், பத்திரிகை நிருபர்களும் வந்து கூடிவிட்டார்கள். ஆட்டம் ஆரம்பிக்கும் நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார்கள். இரு தரத்து ஆட்டக்காரர்களும் வெகு உத்சாகத்துடனும், கம்பீரத்துடனும் வந்துவிட்டார்கள். கரகோஷம் அண்டத்தை யளாவியது. குறித்த நேரத்தில் ஆட்டம் ஆரம்பமாயிற்று. இரு திறத்தினரும் தங்கள் சாமர்த்தியங்களைக் காட்டித் திறமையாக ஆடுகிறார்கள். ஜனங்களின் பரபரப்பு நிமிடத்திற்கு நிமிடம் அதிகமாகிக் கொண்டே வருகிறது.

அன்றும் மறு நாளும் ஆட்டம் வெகு மும்முரமாக நடந்தது. ராஜசேகரன் ஒரு ஸென்சரியடித்தான். மறு தினத்து ஆட்டத்திலும் ஜெயித்தான். எதிரிகள் வெகு நன்றாக ஆடக்கூடியவர்கள் என்று பெயர் பெற்றவர்களாயினும் களைத்துத் தோற்றுப் போய்விட்டார்கள். ராஜசேகரனுக்கு வெற்றி மாலைகள் சூட்டி, கப்புகள் கொடுத்து தடபுடல் செய்தார்கள். விருந்துகள் முதலியன நடந்தன. அதற்குமேல் அவன் எல்லோரிடமும் உத்திரவு பெற்றுக்கொண்டு வாணீபுரத்திற்கே போகப் புறப்பட்டான். வழி யனுப்பவும் ஏராளமான கூட்டங்கள் ரயிலடிக்கு வந்தார்கள். குறித்த நேரத்தில் ரயி

லும் புறப்பட்டது. வெகு உத்ஸாகத்துடன் விடை பெற்றுக் கொண்ட ராஜசேகரன் அவர்கள் தலை மறையும் வரையில் பார்த்துக் கொண்டே இருந்து பின்னர் ஆசனத்தி லமர்ந்தான்.

தான் ஜெயித்த உத்ஸாகமும் ஜனங்கள் காட்டிய அன்பின் குதூகலமும் பெரிதாக மனத்திடையே பொங்குகின்ற தெனினும் "வாணீபுரத்தில் மாசிலாமணியின் நிலைமை எப்படி இருக்கிறதோ? பாரதி எவ்வித மிருக்கிருளோ!'' என்ற கவலை சுற்றிக்கொண்டது. அதோடு உட்கார்ந்து வெளித் தோற்றங்களைக் கவனித்து வந்தான். ரயிலில் இன்னும் அனேகர் உட்கார்ந்திருந்தார்கள். இவன் பெரிய சாம்பியன் என்பதை யறிந்து சந்தோஷத்தோடு பேச வந்தார்கள். அவர்கள் கேட்டதற்குப் பதில் கூறிக்கொண்டே வந்தான்.

எதிர்ப் புறத்தில் உட்கார்ந்திருந்த இருவர் மட்டும் இவனை விசாரிக்கவோ, மற்றவர்களோடு கலந்துகொள்ளவோ இல்லை. அவர்கள் ஹிந்தியில் பேசிக்கொண்டார்கள். நமது சாம்பியன் அடிக்கடி பூனா, பம்பாய், கல்கத்தா முதலிய வட நாடுகளுக்குப் பந்தாட்டத்தின் நிமித்தம் சென்றிருப்பதால் அந்த பாஷையும் நன்ருகத் தெரிந்தவன். அவர்கள் பேசிய விஷயங்கள் முற்றும் விளங்கவில்லை எனினும் சிறிது புரிந்தன. அவ் விஷயங்கள் மிக மிக பயங்கரமாகவும், ஏதோ பெரிய சதியாலோசனை செய்வது போலும் யாருக்கோ பெருந் தீங்கு செய்ய எத்தனிப்பதாயும் தெரிந்தது. அவர்களைத்தான் கவனிப்பது தெரியாம லிருக்கவேண்டி அவர்களது முகத்தை நன்ருகப் பார்க்காமலேயே அவர்கள் சம்பாஷணையை மட்டும் காதில் பட்டவரையில் கவனித்துக் கொண்டான்.

பிறகு அவர்களறியாதவாறு அவர்களுடைய முகத்தை நன்ருகப் பார்த்து மனப் படம் பிடித்துக்கொண்டான். ஏதோ ஒரு ஸ்டேஷனில் அவ்விருவரும் இறங்கிவிட்டார்கள். ராஜசேகரனுக்கு மட்டும் மனத்திற்குள் ஒரு விதமான கலவரம் உண்டாகிவிட்டது. "இந்த இருவரும் யாராக விருப்பார்கள்? இவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் பெரிய படுகுழியாக விருந்ததே! யாருக்கு இத்தகைய சதியாலோசனை செய்தார்கள் என்று விளங்க வில்லையே! சற்றும்

ஈவிரக்க மற்ற மனத்துட னல்லவா பேசி யிருக்கிருர்கள்?'' என்றது பற்றி யோசித்தபடியே இருக்கையில் வாணீபுரம் ஸ்டேஷன் வந்து விட்டது. ராஜசேகரன் இறங்கி வெகு ஆர்வத்துடன் பாரதி வீட்டிற்கு ஓட்டமாக வந்து சேர்ந்தான். அப்போது "அண்ணு! ஒரு வாய் ஆகாரம் சாப்பிட்டு விடு. என்னை வருத்தாதே! அண்ணு! வாயைத் திற'' என்று பாரதி கெஞ்சி கேட்டுக் கொண்டிருக்கிருள். மாசிலாமணி கையினுலும், காலினுலும் பாரதியை உதைத்துத் தள்ளியபடியே "போடீ: போடீ: ஒத்திப் போடீ: எட்டிப் போடீ: தூரப் போடி. ஓடிப் போடி. கிட்ட வராதெடீ: நாசக்காரி: இத்தனையுங் கொள்ளை யடித்தவள் நீதானேடீ: என்னை இன்னும் என்னடி செய்யப் பார்க்கிருய்? ஹி. ஹி. எங்கப் பாட்டி. ஓங்கப் பாட்டி. தூத்து. ஒங்க மூஞ்சி!'' என்றெல்லாம் பிதற்றுகிருன். பெரியதாகச் சிரிக்கிருன்.

பாரதியோ அந்த அடிகளை எல்லாம் சகித்துக் கொண்டு, கண்ணீர் பெருகியவாறு "அண்ணு! அண்ணு!'' என்று கெஞ்சுகிருள். அவனை ஒரு தூணுேடு கட்டிப் போட்டிருக்கின்றது. அந்தோ. இத்துக்ககரமான கண்ருவி காட்சியைக் காண நமது ராஜசேகரனின் மனம் எப்படித்தானிருக்கும்? பாரதியின் கைகளிலும் முகத்திலும் காய வடுக்கள் ரத்தம் தோய்ந்து கருப்புக் கருப்பாயிருப்பதையும் பார்த்தான். மனங் கரைந்து விட்டது. மாசிலாமணியின் உயிருக்கு ஆபத்து வராமலிருக்க வேண்டுமே என்று எண்ணிப் பயந்ததற்கு உயிர் இருந்தும் ப்ரயோஜன மில்லாது, உன்மத்தங் கண்டிருப்பதை நோக்கித் தலை சுழன்றது. மூளையே கிடு கிடுத்தது.

மாசிலாமணியினருகில் சென்று "மாசிலாமணீ! மாசிலாமணீ! நண்பா! ஐயோ! இதென்ன கோரம்! இதென்ன பரிதாபம்! ஹா! வயிறெரிகிறதே! அம்மணீ! இதென்ன கண்ராவிக் கோலம்! எத்தனை நாட்களாக இவ்வித மிருக்கிறது?'' என்று கேட்டான். இதற்குள் மாசிலாமணி "சீச்சீ! படவாப் பயலே! போடா! வெளியே போடா! இங்கு என்னடா திருட வந்தாய்......வா! வா! உட்காரு!......நீ தானே நீ. அவன் நீ தானே! ஹி ஹி ஹி ஹி! ஆமாமாம். அவன்

தான்." என்று கூறியபடி எட்டி உதைத்தான்; வெடுக்கென்று கிள்ளி விட்டான்.

பாரதி "ஐயா! இப்படி விலகி இருங்கள். கிள்ளி விடுகிறான். நீங்கள் சென்ற மறு தினம் முதல் இதே கதியில் இருக்கிறான். முதல் நாள் இரவு எழுந்து ஓடிப்போய் விட்டான். ஊரே அம்மளி யாகிவிட்டது. திருடன் வந்துவிட்டதாக எல்லோரும் பயந்து விட் டார்கள். மெல்ல பிடித்து இழுத்துக் கொண்டு வந்து வீட்டில் சேர்க்கப்பட்ட பாடு தெய்வ எத்தனமாகிவிட்டது. அங்கிமிடம் முதல் எழுந்து ஓடுவதும் குத்துவதும் அடிப்பதுமாக விருப்பதால் இப்படி கட்டிப் போட்டுக் கண்ணுறப் பார்க்கிறேன். இப் பாவி ஜென்மத்திற்கு இனி விமோசனமே இல்லை. சகல கோரமும் பார்த் தாகி விட்டது. டாக்டர்கள் எல்லாம் "மூளை கலங்கிவிட்டது. இதற்குத்தக்க முறையில் வேறு விதமான சிகிச்சைகள்தான் செய்ய வேண்டும். ஆகையினால் இனி மருந்துகள் வேண்டாம்" என்று கூறி விட்டார்கள். என்ன செய்வேன்? ஒன்றுமே தெரியவில்லை. நடுக் கடலில் அகப்பட்ட துரும்பெனத் தத்தளிக்கின்றேன்.

ஆகாரமே சாப்பிட மாட்டேனென்கிறான். அடியும் உதை யுந்தான் பலமாக விருக்கிறது. ஒன்றிற் கொன்று சம்மந்தமின்றி தாறுமாறாகப் பேசுகிறான். ஒவ்வொருவரும் தம் தம் போக்காகப் பேசுகிறார்கள். 'பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டு விடுங்கள். கழுதைப் பாலை வாங்கி இரண்டு வேளையும் கொடுங்கள். எலுமிச்சம் பழத்தைத் தேயுங்கள்.' என்றெல்லாம் சொல்லுகின் றார்கள். எனக்கோ ஒன்றுமே தோன்றவில்லை. என்ன செய்வேன்?" என்று புலம்பினாள்.

இதைக்கேட்ட ராஜசேகரன் மிக்க விசனமடைந்து "அம்மணி! இத்தகைய விதி வரும் என்று யார் கருதியிருப்பார்கள்? கனவிலும் இல்லாத இடி வந்து இடித்து விட்டதே! என் செய்வேன்! என் மனத்தை யல்லவா நான் நொந்து கொள்கிறேன். என்னால் தானல் லவா இத்தகைய ஆபத்தும் வந்து விட்டது என்று கலங்கினான். "அம்மணி! தங்கள் குடும்பத்திற்குற்ற இத்தனை சங்கடங்களுக்கும்

காரணம் நான் தான் என்று கூறவும் வேண்டுமோ? தாயே! ஏழை நான் என் செய்வேன். ஒன்றும் தெரியவில்லையே!......தாங்கள் இவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப இஷ்டப் படுகிறீர்களா?" என்று கேட்டான்.

பாரதி:—ஐயா! என் மனம் தாமரையிலை நீர்த்துளி போன்றிருக்கிறது. என் அண்ணனை எத்தனையோ சிறப்பாகக் காண எண்ணி இருந்தேன். ஆனால் என் விதி குறுக்கிட்டு விட்டது. ஆஸ்பத்திரிக்கு நான் எப்படி யனுப்புவேன். அங்கு எத்தகைய தண்டனைகளுக்குள்ளாக வேண்டுமோ தெரியவில்லையே! நான் இங்கு பலவந்தம் செய்தும் ஆகாரம் சாப்பிட மறுக்கும் இவனுக்கு அன்புடன் அக்கரையாக யார் ஆகாரம் கொடுப்பார்கள்? எவர் கவனிப்பார்கள்? நினைத்தால் என் மனம் பகீரென்கிறதே! இக் கோராமையைக் கண்டு சகிக்க மாட்டாமல் தான் என் அன்னை தன்னை மறைத்துக்கொண்டு என்னை தன்னந் தனியாய் வைத்து இன்னலுற்றேங்கும் படிக்குச் சென்றாள். ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டாம் என்று வைத்தியர்கள் கூறுவார்களா! அனுப்பத்தான் சொல்வார்கள். என் மனந் தான் தவிக்கின்றது. என் செய்வேன்?

ராஜசேகரன்:—"அம்மணி! தங்களுக்கு மனம் வரவில்லை என்பது சரிதான். அங்கு அனுப்பினால் சீக்கிரம் குணமாகு மென்கிறார்களே! அதைப் பார்க்க வேண்டாமா?

பாரதி:—அதில் உபயோக மிருக்கு மென்று அனுப்பிவிட்டு ஒருகால் அவ்வாறு குணமில்லை என்றால் அப்புறம் நம்மிடம் அனுப்புவதே கஷ்டமாமே! அதோடு இத்தனை இம்சைகளையும் அனுபவித்துக் கொண்டு ஏன் வருந்த வேண்டும்! அவனுக்கு குணமானாலும் இங்கேயே சிகிச்சை செய்தால் ஆகாதா! நான் ஒருத்தி உயிருடனிருந்தும் அப்படி அலையவிட மனம் வரவில்லையே! என்ன செய்வேன்? இப்படி அடித்து இம்சிப்பதற்கு நானாக இருப்பதால் பொறுக்கிறேன். அவர்களுக் கென்ன வந்தது? இன்னும் அடித்தும் விலங்கிட்டும் உபத்திரவிப்பார்களாமே!

ராஜசேகரன்:—"அம்மணி! நீங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவந்தான். என்னுடைய சினேகிதன் ஒருவனிருக்கிறன். அவனுக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் வெகு நல்லவர்; மனிதர்களுக்குத் தக்கவாறு வைத்தியம் செய்யும் நிபுணர். நான் அவருக்கு எழுதிக் கேட்கிறேன். பிறகு என்ன பதில் கிடைக்கின்றதோ பார்க்கலாம். அம்மணி! தாங்கள் இங்கு இவரை வைத்துக் கொண்டு தனியாக என்ன செய்வீர்கள்? உதவிக்கு யாரும் இல்லையா!

பாரதி:—"ஐயா! எனக்கு உதவிக்கு என் அண்ணனும், தாயாரும் தான் என்று திண்ணமாக நம்பி இருந்தேன். என் எண்ணத்தில் ஈசன் மண்ணைப் போட்டது போலத் தாயையபகரித்துக் கொண்டார். அண்ணனையாவது கூடிய சீக்கிரத்தில் குணப்படுத்தியளிப்பாரென்று நம்புகிறேன். வேறு கனிகரப் பட்டவர்கள் யாரிருக்கிறார்கள்? மனிதர்கள் கணக்கிற்கு ஒரு கோடி சேனைகள் உண்டு. இந்த ஆபத்தில் யாராவது வந்து எட்டிப் பார்த்தார்களா? ஏன் என்றாவது கேட்டார்களா? என் அண்ணன் நன்றாக இருந்த நாளில் அவனுக்கு இப் பந்தாட்டத்தில் உண்டான புகழைக் கேட்டு சொந்தக்காரர்கள் வயிறு உப்பிச் செத்தார்கள். 'இவனுக்கும் இத்தனை புகழா! இவனும் இவ்வாறு விருத்தி யடைவதா?' என்கிற பொறாமை தாண்டவமாடியது. இதைச் சிலர் நேரிலும் சொல்லிக் காட்டினார்கள். என் தாயார் வருத்த முற்று வாடுவாள். அவள் காலமும் ஆய்விட்டது. இனி யார் வருவார்கள்?

ராஜசேகரன்:—அம்மணி! தாங்கள் வித்யாசமாக நினைக்காமலிருக்க வேண்டும். நான் என் மனப் பூர்வமாக தங்களை வர வேற்கிறேன். என்னுடைய பாட்டனாருடைய கிராமத்தில் என் பாட்டனாரும் பாட்டியும் இருக்கிறார்கள். என் மாமன் அவர்கள் கீழ் அடங்கியவன். என் பாட்டனார் தங்கள் வரவை வெகு சந்தோஷமாக ஏற்றுக் கொள்வார். தாங்கள் அங்கு வந்து விட்டால் அவ்விடத்திலேயே வைத்தியமும் செய்யலாம். என் பாட்டனாருடைய பாதுகாப்பிலும் இருக்கலாம். தாங்கள் இதை வெகு சகஜமாக நினைத்து வர வேண்டும். என்னாலான வரையில் என் கடைசி சுவாசம் உள்ள மட்டும் தங்களைக் கைவிடமாட்டேன்.

பாரதி :—(கண்ணீர் பெருகியவாறு) ஐயா! தங்களுடைய அன்பிற்கும் போராதரவிற்கும் நான் எவ்விதந்தான் பதில் கூறுவது என்று தெரியவில்லை. தாங்கள் அழைப்பது சகஜமே! எனினும் நான் எவ் விஷயத்தையும் வெளிப்படையாகக் கூறுகிறேன். தாங்கள் விரும்புவது போல நான் வருவது அத்தனை உசிதமல்ல. என்னதானிருப்பினும் தங்கள் பாட்டனாரும் பாட்டியும் ஓர் அன்னிய மனிதர்களே. அதிலும் நோயாளியை வைத்து சம்ரக்ஷிப்ப தென்பது சாத்யமற்ற காரியம். மனத்தில் வைத்திருப்பதை உடைத்துக் கூறி விடுகிறேன். அதனால் உங்களுக்கும் கஷ்டம். வீண் வார்த்தைகள் உண்டாகும். பின்னர் வருந்த நேரும். என்னுடைய ஜனங்கள் எட்டிப் பாராது பராமரிப்பாக விருப்பினும் நான் சென்ற பிறகு என்னைப் பற்றி வம்பு பேசி வீண் அபவாத மூட்டையை என் தலையில் சுமத்தி என்னை அடியோடு அழிக்க வழி தேடுவார்கள். இத்தனை துயரமும் எதற்கு விலை கொடுத்து வாங்கவேண்டும்? தங்களுடைய பரிபூர்ண விச்வாசம் ஒன்றே போதும். பகவான் இருக்கிறான். மரம் வைத்தவர் தண்ணீர் கோட்டமாட்டாரா? நம்பியவர்களை வெம்ப வைப்பாரா? என் தலைவிதிப்படி தான் நடக்கும்.

ராஜ :—அம்மா! அறிவற்றவர்களுடன் பேசினால் வார்த்தை வளரும். தாங்களோ யாவும் தெரிந்தவர்கள். நீங்கள் சொல்வது யாவும் வாஸ்தவம். நான் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். வீண் வம்புக்காக மறுத்துக் கூறமாட்டேன். உம். அவனன்றி யோர் அணுவும் அசையா தல்லவா? நான் இதற்குமேல் என்ன சொல்வேன்? தங்கள் அருமை அண்ணனுக்கு விரைவில் குணமாக வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இடைவிடாது துதிப்பதைத் தவிர வேறு என்ன செய்யக் கூடும்?" என்றான். விசனத்தினால் கண்களில் முத்துக்கள் போன்று நீர் வடிந்தது. கைக் குட்டையினால் முகத்தை மறைத்துக் கொண்டான்.

பிறகு "அம்மணீ! எனக்கு காலேஜ் திறக்க இன்னும் சொல்ப தினங்களே இருக்கின்றன. நான் என் பாட்டனாரிடம் சில தினங்களாவது இருந்தால்தான் அவர் மனம் த்ருப்தி யடையும். என் பொருட்டுத்தான் அவர்கள் உயிர் வாழுகிறார்கள் என்றுங் கூறலாம்.

அத்தகையவரின் மனத்தை நோகச் செய்யாமல் நான் நடக்க கடமைப் பட்டிருக்கிறேனல்லவா! மேலும் எனது பாட்டியும் தேக அசௌக்கியமா யிருக்கிறார்கள். ஆதலால் நான் இங்கிருந்து விடை பெற்றுக்கொள்ளட்டுமா? அம்மணீ! மனந் தளராதீர்கள். ஈசனை நம் பிக்கையுடன் ப்ரார்த்தனை செய்யுங்கள். என்னுடைய விளையாட்டி னால் நேர்ந்த இவ் வினையை எனது மறு பிறவியிலும் நான் மறக்க முடியாது. அப்பனே! மாசிலாமணி! மாசிலாமணீ! உம்...எல்லாம் என் விதியின் பயன்." என்று வருந்தினான்.

பாரதி :—ஐயா! முக்கியமாக கிழவரை மகிழ்விக்க வேண்டுவது கடமைதான். ஆயினும் இரண்டு தினங்கள் இருந்துவிட்டுச் செல்ல லாகாதா?--என்று கெஞ்சிக் கேட்டவாறு அவனை நோக்கினாள். அன்பும் பரிதாபமும் ஒன்று கூடி கண்களில் ஜ்வலித்தன. அந்த பார்வையின் கட்டளையை மீறிச் செல்ல மனமற்ற ராஜசேகரன் அன்று கழிய, மறு தினமும் இருந்தான். மூன்றாவது தினம் புறப் படத் தயாரானான். இதற்குள் மாசிலாமணிக்கு ஒட்டமும் அடிக்கும் கையும் சற்று ஓய்ந்து சிறிது குணங் காணப்பட்டதைக் கண்டு ராஜன் உள்ளம் பூரித்தான்.

"அம்மணீ! தங்கள் விருப்பப்படியே இரண்டு நாட்களும் சென்றன. நான் உத்திரவு பெற்றுக்கொள்ளட்டுமா! எனக்கு விடை யளிப்பீர்களா! சென்று வரட்டுமா?" என்று பரிதாபத்துடன் கேட் டான்.

அதைக் கேட்ட பாரதி அதற்குமேல் என்ன சொல்லக்கூடும்? அவளை யறியாது கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கன்னத்தின் மீது உருண்டு கீழே விழுகிறது. அவளாலேயே சகிக்க முடியாத துக்கம் அபரிமிதமாகப் பொங்குகிறது. அவள் வாயைத் திறக்க மாட்டாத பதுமை போல நின்றுவிட்டாள். தேகம் குலுங்குகின்றது. மாறி மாறி ராஜனையும் தன் அண்ணனையும் பார்க்கிறாள். மாசிலா மணியோ தன் போக்காகப் பேசுவதும் பார்ப்பதுமாக இருக்கிறான்.

ராஜசேகரனுக்கு மனங் கலங்கி குழம்பிப் போய்விட்டது. அவன் கண்களும் ஒளி மங்கி நீரை வடிக்கின்றன. ரயிலுக்கோ நேர

மாகிவிட்டது. என்ன செய்வது? தன்னையே சற்று தேற்றிக்கொண்டு "அம்மணி! இப்படி விசனித்தால் ஏழை என் மனம் எப்படி தேறும்? மங்கையர்க்கரசியே! நான் என்ன விருப்பினும் அன்னியன் அன்னியன் தானே! நான் செல்ல வேண்டாமா?" என்று கூறி முடிக்கு முன்னர், பாரதி

"ஹா! தாங்கள் இவ் வனுதையை அன்னியளாகவா எண்ணி, விட்டுவிடப் போகிறீர்கள்? நாங்கள் பரதேசியினும் பரதேசி களல்லவா!......எங்களைக் கைவிடாதீர்கள். ஐயனே!...இப் பேதை யர்களின்பால் கவன மிருக்கட்டும். இந்த திக்கற்றவர்களின் ஞாபக மிருக்கட்டும். எப்போதேனும் லீவு கிடைத்தால் வந்து தரிசனங் கொடுத்துச் செல்லுங்கள்." என்று கெஞ்சிக் கேட்டபடி, தன்னை மீறிய சோகத்துடன் ராஜனின் இரு பாதங்களையும் பிடித் துக்கொண்டு வணங்கினுள்.

ராஜனும் பிரியவேண்டிய விசனத்துடன், "அம்மா! எழுந்தி ருங்கள்; எழுந்திருங்கள்." என்று கூறியபடியே தன்னை மறந்து தூக்கி நிறுத்தினுன். "அம்மணி! ஏற்கெனவே என் மனம் தத்தளித் துத் தவிக்கின்றது. இந் நிலைமையில் தாங்கள் இப்படி மனம் கலங்க லாகுமா? ஹா! என்னுலேயே கட்டுப்படுத்தமாட்டாத விசனம்—பிரிய முடியாத ஏக்கம்.—என்னைப் பற்றி இழுக்கின்றது. அதன் உண்மையை என்னுல் கண்டறிய முடியவில்லை. ரயிலுக்கு நேரமாகி விட்டது. நான் சென்று வருகிறேன். இதோ இந்த நோட்டை தங்கள் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் எனது விலா சம். அண்ணனின் தேக நிலைமையைப் பற்றி அடிக்கடி எழுதுங்கள். எனக்கு லீவு கிடைத்த போதெல்லாம் நான் வந்து பார்க்கிறேன். அம்மணி! நான் சென்று வருகிறேன். கவலைப் படாதீர்கள்." என்று கூறிவிட்டு, பதிலுக்கு நின்றுல் இன்னும் மனம் கலவர மடையும் என்று எண்ணிப் புறப்பட்டுவிட்டான்.

எத்தகையராயினும் மனம் பிடித்துப் பழகிவிட்டால் ஒருவரை யொருவர் பிரியும் நேரம் தன்னை யறியாது மனம் தத்தளிக்கும். ஒரு மனப்பட்டு அன்யோன்யமாய்விட்ட சினேகிதர்களுக்குத்தான் இப்

பிரிவின் துயரம் எத்தகையதென்று தெரியவரும். பாரதியின் தற்போதைய துக்கமே உருவான நிலைமையில் அவள் வருந்துவது வியப்பா! அதிலும் தன் அண்ணனுடைய சினேகிதனுகையினுல் அடிக்கடி வீட்டிற்கு வரவும் பார்க்கவும் பேசவும் அக் காலே முதல் மனமொத்து—கருத்தொருமித்து—இளமைப் பருவத்தின் ஆணிவேர் போன்று அசைக்க முடியாத தனி யன்பும் மதிப்பும் கொண்டு பழகிய உத்தமனுகையினுல் பிரிய மனங் கலங்குவது என்ன ஆச்சரியம்!

ராஜசேகரனின் பிம்பம் மறைந்ததும் ஏதோ ஒரு விதமான கிலியும் பயங்கரமும் இருளும் சூழ்ந்துவிட்டது போலாய்விட்டன. தனக்கு இத்தனை நேரம் ஏதோ பெரிய பக்க பலம் இருந்ததாயும் இப்போது அது மறைந்துபோய் தன்னுடைய பரதேசித் தன்மையை நன்கு விளக்கிக் காட்டுவது போலும் தோன்றிவிட்டது. தன் அண்ணனுடைய கண்ராவி நிலைமையும், தாயார் மறைந்துவிட்ட துயரமும், தன்னுடைய வாழ்க்கையின் கோர நிலைமையும் நன்கு ப்ரத்யக்ஷமாகத் தெரிந்தன. அலறினுள்; அழுதாள் அகங் கரைந்துருகி அல்லலுற்ருள்.

அந்தோ பாவம்! ஆற்றுவாருண்டா! தேற்றுவாருண்டா? தன் னிலையழிந்து சவம்போலக் கிடந்தாள். பிறகு தன் அண்ணனை எண்ணி எழுந்தாள். அவனை பலவந்தம்செய்து மெல்ல ஆகாரத்தைக் கொடுத்தாள். அவனுடைய கட்டுகளை யவிழ்த்துவிட்டு அவனை நன்ருக ஸ்நானம் செய்வித்து மருந்து கொடுத்து மீண்டும் கட்டாமல் விட்டிருந்தாள். எழுந்து ஓடாவிட்டாலும் அந்த அறை முற்றும் சுற்றி ஏதோ சேஷ்டை செய்துகொண்டே உலாவுகிருன். எந்த சமயம் எங்கே ஓடிவிடுவானே என்ற பயத்தால் கதவுகளைப் போட்டுவிட்டுக் கண்ணீர் வடித்தபடியே கவனித்துக்கொண்டிருந்தாள்.

வீட்டை விட்டு ஓடாமல் நின்றதே ஓர் பெரிய குணமாகக் கருதினுள். மறு தினமே இந்த குணத்தை ராஜனுக்கு எழுதவேண்டுமென்று தோன்றியதால் கடிதமெழுத உட்கார்ந்தாள். அதே சமயம்

அவளுக்கோர் கவர் கிடைத்தது. அதை ஆவலுடன் உடைத்துப் படிக்கத் துவக்கினாள்.

"அம்மணீ!

பிரகாசத்தை விட்டு இருளில் புகுவதுபோல ரயிலில் புகுந்தேன். விழிகள் ஆணி அறைந்ததுபோல நின்றுவிட்டன. யோசனைகளோ கணக்கற்ற மயில்களைத் தாண்டியும் தாவியும் சென்று அஸ்திரவாரமற்ற கோட்டைகளைக் கட்டிவிடுகின்றன. காரணம் கடவுளே அறிவார். மாசிலாமணி எங்ஙனமிருக்கிறார். அதே நினைவாகவிருப்பதால் நாளையே பதிலை எதிர்பார்க்கிறேன். தாங்களும் என்போல இதேமாதிரி நினைவாகவிருக்கிறதும், பதிலை எதிர்பார்ப்பதும் சகஜமென்று எண்ணி இதையனுப்புகிறேன். என் தடுமாற்றத்தில் இதற்குமேல் எழுத முடியவில்லை. மன்னிக்கவும். இங்ஙனம்.

ராஜகேசரன்."

அதைப் படித்ததும் பாரதியை ஒரு குலுக்கு குலுக்கியது. பல யோசனைகள், நிகழ்ச்சிகள் கிறு கிறு வென்று சுழன்று கண் முன்பு காட்சி தந்தன. அவைகளிலேயே சிறிது நேரம் சித்தம் பதிந்து உட்கார்ந்திருந்த பிறகு எழுதவாரம்பித்தாள்.

"அன்புமிக்க ஐயா!

அனேக வந்தனங்கள். இதை எழுதத் துவக்கியதும் தங்கள் அன்பு ததும்பிய கடிதங் கண்டு களித்தேன். ஒரு நாளும் கடிதமெழுதி யறியாதவளாகையாலும் என்னுடைய தற்போதைய நிலைமையிலும் என்ன எழுதுவதென்றே தெரியவில்லை; தடுமாறுகிறேன். தாங்கள் மட்டுந்தான் இருளில் இருப்பதாக நினைக்கவேண்டாம். இவ்விடம் சூரியன் உதயமே இல்லை என்றே—நல்லிருளாகவே இருப்பதாய்—ஏழையினுள்ளம் எண்ணுகின்றது. அண்ணாவுக்கு வீட்டை விட்டு ஓடும் குணம் சற்று குறைந்து மறைந்திருக்கிறதே பெரிய குணமாக நினைக்கிறேன். நேற்று முதல் கட்டையவிழ்த்துவிட்டுக் காவ

லிருக்கிறேன். ஈசன் க்ருபையால் சீக்கிரம் குணம் கிடைக்க வேண்டி எதிர்பார்க்கிறேன். வேறு என்ன எழுதுவது? என்ன எழுதக்கூடும்? எதை எழுத யோக்யதையுடனிருக்கி றேன்? எதை எழுதினல் தகும்? தங்களுக்கே விட்டுவிடுகி றேன்.

இங்ஙனம் அனுதைச் சிறுமி
பாரதி.''

என்று எழுதியதைப் படித்தாள். பிறகு உறையிலிட்டு அதைத் தபால் பெட்டியில் போட்டுவிட்டாள். உற்ற துணையும், உரையாட மக்களும், ஆதரிக்க மனிதரும் இல்லாது இப்பேதை பாரதி நோயா ளியான சகோதரனையும் வைத்துக்கொண்டு என்ன செய்வாள் பாவம்! தமயனுக்கு சிஷ்ருஷை செய்வதும், மிஞ்சிய நேரத்தில் நல்ல உயர்ந்த புத்தகங்களைப் படிப்பதும் தன் தாயார் வைத்திருந்த சொல்ப சொத்தைக்கொண்டு சிக்கனமாகக் குடும்பம் நடத்துவதும், படிப்பி ஞல் பொழுதைக் கழிப்பதுமாக இருக்கிறது.

ஒரு தினம் நடுத்தர வயதுடைய ஓர் அம்மாள் பெரியதாக ஒப் பாரி வைத்து தடபுடலாக அடித்துக் கொண்டு அழுதவாறு "ஐயோ யம்மாடி! பார்வதி! நீயாடி போய்விட்டாய். என்னம்மா! பாரதி! மாசிலாமணி! உங்களைப் பரதேசியாக விட்டு விட்டுப் போய் விட் டாளே!'' என்று அலறிக் கொண்டு ஓடிவந்து இவ்விருவர்களையும் கட்டிக் கொண்டு மேலும் அழுதாள்.

இச் செய்கையைக் கண்ட பாரதிக்குத் துக்கம் பொங்கியது. எனினும் இந்த அம்மாள் யார் என்று கவனித்தாள். எப்போதோ பார்த்தது நினைவிற்கு வந்தது. அந்த அம்மாள் அழுது ஆர்ப்பாட்டம் செய்து முடிந்ததற்குப் பிறகு "அம்மாடீ! என் செல்வமே! என்ன அனியாயமடீ! இந்த குடும்பம் இப்படிப் பாழாகிவிடுமா! யாரிட்ட சாபமோ! என் வயிறு பற்றி எரிகிறதே! உங்கள் தகப்பன் இருந்த சவரனை என்ன! உன் தாயார் இருந்த அழகென்ன? இப்படியுமா சிதறிப் போய் விடும்?

"ஐயோ! எந்த கட்டேலெ போவானே மாசிலாமணியின் தலை பிலே பந்தாலே அடித்துக் கொன்று விட்டானுமே! என்ன அனி

யாயம்! அவன் நாசமாகப் போக. ஆட்டத்திலே கொள்ளி வைக்க, அதனாலே தானே அம்மா தூக்கிட்டுக் கொண்டு செத்தாள். இவனுக்குப் பயித்தியம் பிடித்தது. உன் கதி அதோகதியாயிற்று. நான் காசி யாத்திரை சென்று ஒரு வருஷமாகிவிட்டது.ஏதோ உன் தந்தையின் சிறிய தாயார் ஒருத்தி இருந்தாள் என்று நீ கேள்விப் பட்டிருக்கலாம். எப்போதோ பார்த்திருக்கலாம். அந்தப் பாவி நான் தான். கிராமத்திலேயே என் காலத்தை ஒழித்தேன். காசி யாத்திரைக்குச் சரியான துணை கிடைத்ததால் நான் அவர்களுடன் சென்று நாலு நாளைக்கு முன்பு தான் திரும்பி வந்தேன்.

வந்த உடனே இடி இடித்தது போன்ற இந்த செய்தியைக் கேள்விப்பட்டு ஓட்டமாக ஓடி வந்தேன். இந்த கண்றாவியைக் கண்டு சகிக்க முடியவில்லையே! நீ ஒண்டியாக எப்படி இவனை வைத்துக் கொண்டு கஷ்டப் படுகிறாயடியம்மா!'' என்று பெரிதாக உபசரித்துக் கூறினாள்.

இதைக் கேட்ட பாரதிக்கு இந்த அம்மாளைப்பற்றிய நினைவுகள் உண்டாயின. தங்கள் வீட்டிற்கு இவர்கள் எப்பொழுதோ வந்திருப்பதாயும், இவர்கள் வீட்டுக்குக் கல்யாணத்திற்குத் தாங்கள் சென்றிருந்ததாயும் நினைவு வந்தது. "பாட்டீ! இனி என்ன வருந்தி என்ன பயன்? பந்து விளையாட்டத்தின் விதியே பாலை எறிவதாகும். அது வேண்டு மென்று யாரும் செய்ததல்ல. அவ்வாறான சந்தர்ப்பங்கள் நிகழ்வது மிகவும் இயற்கையானதேயாகும். இதற்காகப் பிறரை ஏன் திட்ட வேண்டும்? நாங்கள் செய்த பாவம் இவ்விதமாயிற்று. என் தாயாரின் தலைவிதி முடிவு அவ்விதமிருந்தது. இதை மாற்ற யாரால் முடியும்? எங்களுக்கு அதிர்ஷ்ட மிருப்பின் என் தந்தை உயிருடனிருக்க மாட்டாரா! எல்லாம் அவ்வளவு தான்!'' என்று வருத்தத்துடன் கூறினாள்.

வந்த அம்மாள் ஏதேதோ குடும்ப விஷயத்தையும் மற்ற பொது விஷயங்களையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள். பிறகு ஸ்நானம் செய்து போஜனம் செய்தாள். அந்த அம்மாளுக்கு வேறு பிள்ளை குட்டிகள் ஒன்றும் கிடையாது. இளம்பிராயத்து விதவை. ஸ்தல

யாத்திரை, தீர்த்த யாத்திரை, ஸ்வாமி தரிசனம், புண்ணிய க்ஷேத்திரம் என்று யார் யார் எங்கு செல்கிறார்களோ, அங்கெல்லாம் அவளும் போய்வந்து விடுவாள். இப்படியே காசி யாத்திரைக்கும் சென்று வந்தாள். அவளை அழைத்துச் செல்கிறவர்களுடன் சண்டை இல்லாது அந்தம்மாள் இருந்த நாள் கிடையாது. அவளைக் கண்டாலே எல்லோருக்கும் பயம். அத்தகைய புண்ணியவதி பாரதியின் வீட்டிற்கு வந்து இவர்களுக்குத் துணையாக நிலைத்துவிடத் தீர்மானித்து விட்டாள். இன்னும் சில உறவினர்களும் இதை யாமோதித்தும், சிபார்சு செய்தும் சரி என்று உத்திரவு போட்டுச் சட்டமாக்கி விட்டார்கள். ஆதலால் வள்ளியம்மாள் என்கிற அந்த அம்மாள் இங்கு ஸ்திரமாகிவிட்டாள்.

நமது பாரதிக்கும் அது பரம த்ருப்தியாகவே தோன்றியது. தனக்கென ஓர் பெருந் துணை இல்லாமல் தான் எவ்வளவு தைரியமாக இருப்பினும் மனத்திற்குள் எந்த சமயம் என்ன நேருமோ! யாதாகுமோ! யார் என்ன சொல்லுவார்களோ! என்ற பயமும் பாதித்துக் கொன்றுகொண்டே இருக்கும். இப்போது அந்த பயமின்றி பெரியார் துணையுடனிருக்கும் தைரியத்தில் சற்று விசாரமின்றி இருக்கலாம் என்கிற தெம்பு உண்டாயிற்று. இந்த அம்மாளின் குண விசேஷங்களோ, மற்ற மாதிரிகளோ ஒன்றும் தெரியாதாகையினால் சந்தோஷமாகவே முதலில் தோன்றிவிட்டது. இதை ராஜசேகரனுக்குத் தெரிவிக்க எண்ணி உடனே கடிதமும் எழுதி விட்டாள்.

இந்த அம்மாளின் ஆட்சியே ஆரம்பமாகிவிட்டது. மாசிலாமணிக்கு ஓட்டங்களும், ஆட்டங்களும் சில தினங்கள் குறைவதும், சில தினங்கள் அதிகப்படுத்துவதுமாக இருக்கின்றன. இவன் இரவு பகல் சத்தமிட்டுக் கத்துவதும் பாடுவதும், பேசுவதுமாக ஆரம்பித்து விட்டான். இதைக் கண்ட அக்கம் பக்கத்து வீட்டினர்களும், குடி இருப்பவர்களும் பாரதியைக் கண்டித்தார்கள். "இம்மாதிரி இருப்பதால் எங்களுக்கு இரவு பகல் தூக்கமில்லை. குழந்தைகளெல்லாம் இச் சத்தத்தைக் கேட்டு அலறுகின்றார்கள். நோயாளிகளுக்கு பயமும், கண் விழிப்பினால் நோய் அதிகரிப்பும் உண்டாகின்

றன. அவர்களிடம் கூறினால் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப மறுக்கிறார்கள். அதிகாரிகள் இதில் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று போலீஸுக்கு எல்லோருமாக எழுதிப் போட்டுவிட்டார்கள்.

இந்த சதியும், சூழ்ச்சியும் சற்று மறியாத பாரதி தன் விதியை எண்ணியவாறு புத்தகம் படித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் வீதியில் இருவர் ஒரு மோட்டார்காருடன் வந்து ''யாரது வீட்டில்?'' என்று கூப்பிட்டார்கள். இந்த குரலைக் கேட்டு பாரதி வீதிப்புறம் பார்த்தாள். வீதியில் இரண்டு போலீஸ்காரர்கள் நிற்பது கண்டு திடுக்கிட்டலறினாள். அவர்களை நோக்கி, "ஏனய்யா! யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று தைரியமாகக் கேட்டாள்.

வீதியிலிருந்த இரு போலீஸ்காரர்களும் அவர்களின் அட்டகாஸ தோரணையுடன் "அம்மா! உங்களைத்தான் தேடுகிறோம். பாரதியம்மாள் நீங்கள்தானே! உங்கள் அண்ணன்தானே பந்தாட்ட வீரன் மாசிலாமணி என்பவர். அவருக்குச் சில தினங்களாகப் பயித்தியம் பிடித்திருப்பதால் அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு மிக்க இடைஞ்சலாயும், கெடுதலாயுமிருக்கிறதால் அவரை வீட்டை விட்டு ஆஸ்பத்ரிக்குக் கொண்டுபோய் விடும்படி அதிகாரிகளின் உத்திரவு. ஆகையால் அவரை அழைத்துக்கொண்டு போக வந்திருக்கிறோம். எங்கே அவர்?'' என்று கூறிக்கொண்டே தடதடவென உள்ளே வந்து, அப்போது தன் போக்காகத் தாறுமாறாகக் கூச்சலிட்டுப் பிதற்றும்மாசிலாமணியைக் கண்ட போலீஸார் ''இதோ இவர்தானே'' என்று கையைப் பிடித்துக்கொண்டார்கள்.

இந்த வார்த்தையைக் கேட்ட பாரதி இடி யோசையைக் கேட்ட நாகம்போல கதிகலங்கிப்போய் நிமிட நேரம் தம்பித்து நின்றாள். "ஐயோ! இதென்ன அநியாயம். யார் இம்மாதிரியான தகவலைத் தெரிவித்திருப்பார்கள்? ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டாம் என்று இருக்கையில் இம்மாதிரியான காரியத்தை யார் செய்திருப்பார்கள்? அவனையனுப்பிவிட்டு நான் என்ன செய்வேன்?'' என்று கண்ணீர்விட்டுக் கலங்கியவாறு "ஐயா! இந்த வீண் அபவாதம்

யாரோ வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். எங்கள் போதாக் காலக் கொடுமைகளை நாங்கள் அனுபவிக்கின்றோம். அவனால் பிறருக்கு ஒரு விதத் தீங்கும் இல்லை. தெய்வமே என்று நாங்கள் கிடக்கிறோம். தயவு செய்யவேண்டும்.'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

அந்த தொழிலுடையவர்களுக்கு இத்தனை இலேசில் இரக்கம் பிறப்பது எங்கோ நூற்றில் ஒருவர் கிடைத்தால் அரிது. அதிகாரம் செலுத்தி அட்டகாசம் செய்வதே அவர்களின் லீலைகளாக விருக்க அவர்கள் தயவு காட்டுவதாவது. அதிலும் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி நடக்கவேண்டியவர்கள் இப் பேதைப்பெண்ணின்மீது சற்றும் கருணையற்று முடுக்காகப் பேசத்தொடங்கி, "என்ன ஓங்க வீட்டு மனிதர் மாதிரி சர்க்கார் அதிகாரிகளையும் எண்ணிவிட்டீர்களா! இதோ அதிகாரிகளின் உத்திரவு. இதன்படி நாங்கள் நிறைவேற்றுவது எங்கள் கடமை. இவரால் எல்லோருக்கும் தொந்திரவு என்றால் நாங்கள் அழைத்துச்சென்றுதான் தீரவேண்டும். உங்களுக்கென்ன இதனால் கஷ்டம்? சரியான சிகிச்சை செய்து விரைவில் குணப்படுத்துவார்கள். பிறகு இன்னும் சந்தோஷமாகிவிடும். உம். எங்களுக்கு நேரமாகிறது, வழியை விடுங்கள்.'' என்று கூறிக்கொண்டே இரண்டு பேர்களாக மாசிலாமணியைப் பிடித்து,தடதட வென்று இழுத்துக்கொண்டு வந்து வண்டியில் எற்றச் சென்றார்கள்.

அந்தோ! பாரதி தாங்கமாட்டாத துக்கத்துடன் "ஐயா! இவன் தான் என் உயிர். இவன்தான் என் ஜீவாதாரம், இவனை விட்டு விடுங்கள். இவனால் பிறருக்கு எந்த வித தீங்கும் நேராது. ஐயா! இது க்ஷாத்திரத்தினால் வேண்டுமென்று தயார் செய்த விஷயம். வேண்டுமானால் நான் இவனை யழைத்துக்கொண்டு எந்த நாட்டுப்புறத்திற்காவது செல்கிறேன். இப்போது விட்டு விடுங்கள். இப்படி என்னை வதைக்காதீர்கள்'' என்று மன்றாடியவாறு காரின் அருகில் சென்று மாசிலாமணியின் சட்டையைப் பிடித்துக்கொண்டு மண்டியிட்டு அலறினாள். எது செய்து என்ன பயன்! அவனை விலக்கித் தள்ளி விட்டு வண்டியை வேகமாக விட்டுக்கொண்டு போய்விட்டார்கள். "ஹா! அண்ணா!'' என்று கதறியவாறு மூர்ச்சையாகிவிட்டாள்.



—68-வது பக்கம் பார்க்கவும்.

6-வது அதிகாரம்

அஞ்சா நெஞ்சம்—பஞ்சமா பாதகம்

உலகம் பல விதம். உலகம் கலகம். என்பது மூதாதையர் மொழியாகும். உலகத்திலுள்ள ஏனைய மக்களும் ஒன்றாக, ஒரு மனப்பட்டு அன்புடன் ஒழுகுவது என்பது எங்கேனும் நடக்கிறதா? கோடிக் கணக்கான மக்கள் தோன்றியது போல கோடிக் கணக்கான எண்ணங்கள், குணங்கள், தன்மைகள் யாவும் உண்டாகி யிருப்பது வெள்ளிடை

மலே. சிலர் அன்புடனேயே பிறரை நேசித்து நடத்துகிறார்கள். சிலர் அன்பை அடியோடு விற்று விட்டு ஆழம் பார்ப்பதற்கும் சோதனைக் குள்ளாக்குவதற்குமே இருக்கிறார்கள். அந்த கோஷ்டியில் சேர்ந்த தோகையே அதிகம் என்பதைக் குறிப்பிட வேண்டுமா!

போதாக் குறைக்குப் பொன்னியம்மாள் குறை என்பதுபோல காமுவும் விசாலமும் தாமரையிலை நீர்த்துளி போன்று தத்தளித் திருக்கும் சமயம், இந்த கிழவி யொருத்தி சனியன் புகுந்தது போல வந்து அட்டகாஸமாக அமர்ந்ததும் அப் பேதையர்களின் மனம் பட்ட பாட்டை விவரிக்க வேண்டுமா? "ஹா! இது சோதனே! வேண்டு மென்றே சோதனை செய்து என் மானத்தை வாங்கி, மனந் தவிக்கச் செய்ய எண்ணித்தான் இவள் ஒரு நாளுமின்றித் திருநாள் போல வந்திருக்கிறாள். இவளுடைய வரவு நல்வரவாக விருக்கு மாயின் இதற்கு முன்பு ஒரு முறை இல்லை யெனில் ஒரு முறையாவது வந்திருப்பாள். இம்மாதிரி இக் காலத்தில் திடீரென்று பழய பகை களேயும் மறந்து உறவாட வந்திருப்பது அனர்த்தத்திற்கு என்பதைக் கூறவும் வேண்டுமா?" என்று தாயும் மகளும் தவிக்கின்றார்கள். வந்த வளோ, வெத்திலேப் பாக்கு தட்டோடு கொண்டு வந்து பெரிய அமர்க்களத்துடன் அழைக்கின்றாள். விசாலம் ஓர் பெரிய போர் வையை இழுத்துப்போர்த்தி காமுவைப் படுக்க விட்டு விட்டுப் பிறகு கிழவியின் முன்பு வந்து "வாருங்கள். எப்போது வந்தீர்கள்? எல் லோரும் சௌக்யந்தானே! அப்புக்குட்டி எங்கே இருக்கிறான்? வேலையிலிருக்கிறானா?" என்று பல விசாரணைகளுடன் நின்றாள்.

கிழவி ஒரு கனைப்பு கனைத்துக் கொண்டு "என்னமோ இருக் கிறோம். வேலையாவது வெட்டியாவது. அப்பு என்னமோ தவித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. நான் எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டு இங்கு வந்தேன். காமு எங்கே! குழந்தையைப் பார்த்து எத்தனையோ நாளாயிற்று, கூப்பிடு" என்றாள்.

விசாலம்:—ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள்? பத்து தினங்க ளாக காமுவுக்கு ஜுரம்; கண் திறக்கவில்லை. அதோடு வாயுவு மாதிரி

கால் இரண்டும் வீங்கிக் கிடக்கிறது. தொம்மக் கூண்டு மாரியாத்தா ளாம். ஊசு வாயுவாம். உப்பு வாயுவாம். பித்தப் பாண்டுவாம். யார் யாருக்கு என்ன தோன்றுகிறதோ அப்படி எல்லாம் பெயரிட்டுக் கூறுகிறார்கள். தேகம் முற்றும் ஏகாண்டமாக வீங்கி இருக்கிறது. பாச்சை போல வெளுத்து விட்டது. எழுந்து நடமாட்டமே இல்லை. ஆகாரமே கிடையாது. வைத்தியர்களை வைத்துப் பார்க்க சக்தி ஏது? தெய்வம் விட்ட வழி என்று நம்பிக் கிடக்கிறேன். ஆஸ்பத் திரிக்கு அனுப்பிவிட மனம் வரவில்லை. சிலர் மலையோரமாக உள்ள ஊரில் கொண்டு வைத்துக் கொண்டால் அங்குள்ள ஔஷதங்களின் காற்று பட்டு குணமாகிவிடும் என்கிறார்கள். அப்படித்தான் செய்ய லாமென்று எண்ணி இருக்கிறேன். என்ன ஆகுமோ!

கிழவி:—ஐயோ! அப்படியா குழந்தைக்கு ஆபத்து வந்து விட்டது. என்னடி அனியாயம். கிளிபோல ஒரு பெண்ணாயிற்றே! அதையும் பலி கொடுத்துவிடுவாயா என்ன?—என்றுகூறிக் கொண்டே காமு படுத்திருக்கும் படுக்கை யருகில் வந்து "அம்மாடீ! என் செல்வமே! காமூ! என்னடீ இப்படி படுத்து விட்டாய்? அம்மா தலையில் கல்லைப் போட்டு விடுவாயா என்னடீ?'' என்று கூறியபடியே முகத்தின் போர்வையை விலக்கித் தடவிப் பார்த்தாள். காமு கண்ணையே விழிக்கவில்லை.

கிழவி முகத்தைத் தடவியதும், "ஐயயோ! அடீ விசாலம்! வந்ததடீ மோசம்! குழந்தையின் முகம் ஜில்லென்று சீதளம் வந்து விட்டதடீ! "ஐயயோ! கை கால்களும் சிலு சிலுப்பாகவே இருக்கு தடீ!'' என்று பெரிதாக சத்தமிட்டாள். இம்மாதிரி சில கிழங்கள் —ஏன் கிழங்கள் அல்லாத ஆண்களும் பெண்களும் கூட — கூறி நோயாளியையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் ஒடுங்கச் செய்து விடுகிறார்கள். இதனால் எத்தனை கெடுதல், ஆபத்து என்பதைச் சற்றும் யோசிப்பதே இல்லை. தைரியங் கூறி உயிர்ப்பிக்கும் சக்தி சிலரிடந்தானிருக்கிறது.கடுகுபிடி கோஷ்டியில் சேர்ந்த வீராயி என்கிற அந்த அம்மாள் செய்யும் ஆர்ப்பாட்டதிற்குப் பயப்படுபவள் போல விசாலம் நடுங்கி அபிநயித்தாள். இருவர் மனத்திலும் ஒவ்வொரு

ரகஸியம் மறைந்து கொண்டு குடைவது அவரவர்கள் தானறிவார்கள்.

விசாலம் என்ன செய்வாள் பாவம்! "உம். என் விதியின்படி முடிவு நடக்கட்டும். நீங்கள் களைத்துப் போயிருக்கிறீர்கள்; ஸ்நானம் செய்து விட்டு வாருங்கள். அருகிலேயே ஆறு இருக்கிறது. சமயலாகி விட்டது. போய் வாருங்கள்" என்று கூறினாள்.

கிழவி:—ஐயோ! எனக்கு இப்போது ஆகாரமும் வேண்டுமா! பாழும் வயிறு பற்றி எரிகிறதே. குழந்தை இப்படி கிடக்கையில் யாருக்குச் சாப்பாடு வேண்டும்? நான் குழந்தையின் பக்கத்தை விட்டுப் போகவே மாட்டேன். இங்கேயே இருந்து இவளை கவனிக்கிறேன். உனக்கு வேலை இருந்தால் நீ செய்யப்போ:—என்று கூறிவிட்டு சட்டங் திட்டமாகப் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

என்ன செய்வது? விசாலத்தின் இருதயம் துடிதுடிக்கிறது. எந்த வழியில் கிழவியைக் கிளப்புவது என்று தெரியாமல் விழிக்கிருள். காமுவும் அப்புறம் இப்புறம் திரும்பவும் பயந்து கண்ணையே திறக்காது படுத்திருந்தாள். எத்தனை நேரந்தான் இப்படி உட்கார்ந்து வீராப்பு பேச முடியும். வீராயி பேசும் மாதிரியையும், பிடிவாதம் செய்யும் மாதிரியையும் பார்க்கையிலேயே இவள் வேண்டுமென்று தான் வந்திருக்கிருள் என்று நிச்சயமாகத் தெரிந்து விட்டது. அதற்கு மேல் ஒரு சூட்சி செய்ய எண்ணினுள்.

சற்று வெளியில் சென்று ஓடி வந்து, அர்ஜெண்டார் தனக்கு தந்தி வந்திருப்பதாக ஒரு கடி பிடி செய்து, உடனே தன்னை வரும்படித் தன் சிறிய தாயார் தெரிவித்திருப்பதாகக் கூறி இப்பொழுதே புறப்பட்டு விட வேண்டுமென்று ஒரு மூட்டையை அவிழ்த்தாள். உடனே மூட்டைகளையும் கட்டி விட்டாள். அங்கு வந்திருக்கும் வீராயியின் பதிலையே எதிர் பார்க்காமல் கிளம்பி விட்டாள். "அம்மா! நீங்கள் வராத விருந்தாய் வந்திருந்தும் என் பாவம் விருந்திட்டு மகிழப் பிராப்தமில்லை. இந்த சமயம் குழந்தை பிழைத்தால் போதும் என்று தோன்றுவதால் நான் அவசரமாகச் செல்கிறேன். மன்னியுங்கள்." என்று கூறி விட்டு, சாமான்களை வாரி ஒரு வண்டி

யில் போட்டு விட்டுத் தானும் மகளும் மற்ருெரு வண்டியிலமர்ந்து செல்ல எத்தனித்தார்கள்.

இதுவரையில் பூனைபோல் உட்கார்ந்திருந்த வீராயி சர்ப்பம் போலச் சீறி எழுந்து "அடீ துஷ்டே! பிரஷ்டே! இந்த பூச்சி வித்தையும், மிரட்டலும் யாரிடம் காட்டப் பார்க்கிருய்? உங்கள் ரகஸிய ஊழல்—பவிஷு. யாருக்குத் தெரியாதென்று நினைக்கிருய்? ஊரெல்லாம் சந்தி சிரிக்கும் உங்கள் யோக்யதைக் குப்பையை—நாற்றத்தை மூடிவைத்துப் பூசப் பார்க்கிருயா! வெட்கங்கெட்ட இந்த பிழைப்பு பிழைப்பதைவிட எங்காவது சென்று பிராணனை விட்டு விடலாமே! நாக்கைப் பிடுங்கிக்கொண்டு மடிந்திருக்கலாமே. இந்த அழகிற்கு எத்தனை கட்டுக் கதைகள். எத்தனை பொய்ப் புராணங்கள் எத்தனை அட்டகாசங்கள். அப்பாடா! இந்த வள்ளலறியாதவர்களிடமல்லவா அந்த மாயஜால வித்தைகள் பலிக்கும்? இந்த வீராயியிடமா பலிக்கும்? உங்கள் திருட்டெல்லாம் இனி மூட முடியாது.

'என் மகன் அப்புவுக்கு இவளைக் கொடுத்துவிடு' என்று கேட்டபோது இல்லாத பொல்லாத வம்புகளையும், நோட்டங்களையும் கூறி அளந்தீர்கள். உங்கள் தலையில் நீங்களே மண்ணைப் போட்டுக் கொண்டீர்கள். அப்போதே வகையாகச் செய்திருந்தால் இந்த ஆபத்தில்லையல்லவா? எங்களுக்கு மானம் போகிறது; தலைகாட்ட முடியவில்லை. எங்கள் மகனுக்குப் பெண் பேசச் சென்றவிடமெல்லாம் "உங்கள் சொந்தக்காரி திருட்டுப் பிள்ளை யுண்டாகி இருக்கிருள். இத்தகைய ஆபாசமான குடும்பத்து சம்மந்தம் எங்களுக்கு வேண்டாம்." என்று கூறி ஏளனஞ் செய்து நகைத்தார்கள்.

அதே வார்த்தைகளை இன்னும் பலர் கூறி எங்களைத் தலை காட்ட முடியாமல் ஏசுகிருர்கள். பொட்டச்சியை அடக்கும் விதந் தெரியாது இவ்வாறு தலைக்கேறவிட்டுப் பின் அதனுல் உண்டாகிய தீமைகளை மறைக்கப் பலவித நாட்டியமாடுகின்ருயா! வெட்கங் கெட்ட நாசகாலிகளே! உங்கள் எழவால் எங்கள் குடி விளங்க வழியின்றி பழிச்சொல்லைத் தாங்கி நிற்கிறது. எங்கள் சாபம் வீணுகி விடுமா! மானங்கெட்ட உங்களுக்கு வெட்கமில்லை! துக்கமில்லை! எல்

லாம் கடந்துவிட்டதா? எங்கள் பாடுதானே திண்டாட்டமாகத் தலை போவது போலிருக்கிறது. இன்னும் எத்தனை நாளைக்கு இப் பிழைப்பு பிழைக்க உத்தேசம்? உங்களை பஜீத் செய்யாமல் நான் விடுவதில்லை. என் மகன் "சோதா! பீடி குடிக்கிறான்; சூதாடுகிறான்; தேவடியாள்வீடு போகிறான்; நாடகம் ஆடுகிறான் என் மகளுக்குத் தகுந்த யோக்யதையுடையவன் இவனல்ல. இவனுக்கு வாழ்க்கைப் படமுடியாது.'' என்று வெகு வீர்யமாகக் கொட்டியளந்தீர்களே! இப்போது உன் பெண்ணின் யோக்யதையை யார் கூறுவது?

என் மகன் சாதாரணமாக இருந்ததற்கே வம்பு கதை கட்டி னாயே! உன் மகளுக்குப் பிறக்கப்போகும் குழந்தையை ஊர் மெச் சும்! ஊரார் எடுத்துக் கொஞ்சி முத்தமிடுவார்களல்லவா! சீச்சீ! பேமானிக் கழுதைகளே!'' என்று ஆத்திரங்கொண்டு, ஆவேசத் துடன் பெரிதாக இறைச்சலிட்டுக் கத்த வாரம்பித்துவிட்டாள். விசாலாக்ஷிக்கும் காமுவுக்கும் குடல் நடுங்குகின்றது. தங்களைச் சொல்லும் சொல்லால் மானம் போகிறது. வெளியாருக்குப் பகிரங்க மாகத் தெரிந்து காரி உமிழப்போகிறார்களே என்ற பயம் நடுக்கு கிறது. விசாலாக்ஷிக்கு இவளுடைய வார்த்தைகள் ஆணிபோலப் பொத்தி சற்று ஆத்திரமும் உண்டாகிவிட்டது.

இதற்குள் வீராயி, போத்திக்கொண்டு படுத்திருந்த காமு விடம் பாய்ந்து "அடீ வெக்கங்கெட்டவளே! போர்வை என்னடீ. உன் பவிஷுக்கு? தேவடியாள் பிழைப்பிற்கும் கேடுகெட்ட பிழைப்பு கொண்ட உனக்கு முக்காடும் வேறு வேண்டுமோ! ஏண்டீ! எழுந் திருடீ!'' என்று கூறிக்கொண்டே முக்காடைப் பிடித்து இழுக்கப் போனாள். விசாலாக்ஷி ஆத்திரமும், துக்கமுங் கொண்டு "அம்மா! போதும். போதும். நில்லுங்கள். எங்கள் விதியை நாங்கள் அனுப விக்கத் தயாராக இருக்கிறோம். இத்தனை நாளும் ஏன் என்று கேளாத உறவு இப்போது பரீக்ஷிப்பதற்கும், பஜீத் செய்வதற்கும் வீணான அபவாதத்தைக் கூறிப் பழிப்பதற்காகவும் வந்துள்ளதோ? உங்கள் கபட நாடகம் போதும். என் குழந்தையைத் தொடவேண் டாம். போர்வையை இழுக்கவேண்டாம். இருங்கள். விலகிப் போங்கள்.'' என்று கூறிக்கொண்டே விசாலம் வீராயியின் கையைப்

பிடித்திழுத்துத் தள்ளினாள். வீரர்யி காமுவை இழுத்து நிறுத்தி மானபங்கம் செய்யும் நோக்கத்துடன் எக்கச்சிக்கமாக நின்றதால் இழுத்துத் தள்ளியதும் ஒரு மூலையில் போய் தடாரென்று விழுந்தாள்.

அதே க்ஷணத்தில் விசாலம் காமுவை அழைத்துக்கொண்டு வெகு வேகமாக வண்டியிலமர்ந்து, வண்டியைப் பறக்கும்படியாக விட்டுவிடச் செய்தாள். அப்போது ராக்காலம், நல்லிருள்; 9 மணி இருக்குமாதலால் அவர்களுடைய வீட்டு சச்சரவு அதிகமாக அக்கம் பக்கம் தெரியவில்லை. எனினும் ஏதோ உள்ளுக்குள் இந்த விஷயத்தைப்பற்றி சண்டை நடப்பது அந்த வீட்டிற்குள்ளிருப்பவர்களுக்குமட்டும் தெரிந்தது. தாயிக்கும் மகளுக்குமே இவ்வித சம்வாதம் நடப்பது சகஜமாகையினாலும், இப்போது வந்தவளும் இந்த ஊழலைப்பற்றி பேசுவதை யறிந்ததாலும் அப்போது இரவு சாப்பாட்டு நேரமாகையினாலும் யாரும் இங்கு உள்ளே வந்து கவனிக்கவில்லை.

சென்னை-600 008
182973

இவர்கள் வெளியே போவதற்கு ஏற்கெனவே ஏற்பாடுகள் செய்திருந்ததால் வெகு சுலபமாகச் சென்றுவிட்டார்கள். வண்டி மான்வேகம், மனோவேகமாகப் பறக்கிறது. விசாலத்தின் சித்தி ஊருக்குச் செல்வதற்கு இங்கிருந்தே நேரில் வண்டி மார்க்கமாகச் சென்றால் 15 மைல்தான் இருப்பதால் வண்டியிலேயே சென்றுவிடுவதென்றும், நடுவழியில் ஓர் சத்திரம் இருக்கிறது. அந்த சத்திரத்தில் இரவு தங்கி விடியு முன்பு மீண்டும் புறப்படுவதாகவும் வண்டிக்காரனுடன் ஏற்பாடு செய்திருந்தாள். ஆதலால் வண்டி அந்த சத்திரத்தை நோக்கிச் செல்லுகிறது. உள்ளே இருக்கிற இருவருக்கும் மனத்திலுள்ள வேதனைக்கு அளவே இல்லை.

சோதனை என்பது எத்தகையவர்களுக்கும் அடுக்கடுக்காக வருவதல்லவோ அதன் லீலை. காமுவுக்கு அன்று உண்டான கடிபிடியும் மன அதிர்ச்சியும் ஒருங்குகூடி வதைப்பதோடு, மாதங்கள் ஆய்விட்டதால் அந்த கரு வேதனையும் கூட உண்டாகிவிட்டது. அந்தோ! அந்த நோயின் அனுபவமே அறியாத சிறுமி என்ன செய்

வாள் பாவம்! இதுதான் அதுவோ! இதுதான் நமக்குப் பாக்கி இருந்த நோயோ! ஐயோ! இதை நான் எவ்விதம் என் தாயிடம் கூறுவேன்? என் தேகமே கூசுகிறதே. மனம் தத்தளிக்கின்றதே. சத்திரத்தில் தங்கினால் எந்த சமயம் எவ்வித மாகுமோ ஒன்றும் தெரியவில்லையே! ஹா! எதிர்கால தேவதையே! உன் திருவிளையாடல் புராணத்தின் இரண்டாம் பகுதியும் துவக்கமாகிவிட்டதே! இந்த சங்கடத்தை எவ்விதம் தாங்குவேன்? ஹா! ஈச்வரா!'' என்று தவித்து வாடுகிறாள்.

மாட்டு வண்டியின் தடாபுடார் சத்தமும், நாட்டுப் புறத்து வீதிகளின் மேடு பள்ளத்தில் செல்லும் போது உண்டாகும் பாதையும் கூற வேண்டுமா! அந்த ஆட்டம் இவளுடைய தவிப்பை இன்னும் அதிகப் படுத்துகிறது. இனியும் கூறு திருப்பது சரியல்ல. தலைவிதி எவ்விதம் முடிந்தாலும் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று எண்ணித் துணிந்து "அம்மா! என் விதியின் மற்றொரு பாகமும் ஆரம்பமாகி விட்டது. இனி இந்த நிமிடமே என்னுசையை விட்டுவிடு. நான் எப்படியாவது பிராணத்தியாகம் செய்து கொள்கிறேன்.'' என்று வணக்கத்துடன் புலம்பியவாறு கூறினாள்.

இதைக் கேட்ட விசாலத்திற்கு பேரிடி தலையிலிடித்தது போலாயிற்று. "ஐயையோ! இந்த ஆபத்தும் இப்போதே வந்து விட்டதா! ஹா! என்ன செய்வேன்? நடுக்காட்டு வழியாயிற்றே! வண்டிக்காரன் அன்னியனொருவனிருக்கிறானே! அந்தோ! சர்வேசா! இப்படி எல்லாம் சோதனை செய்ய எத்தனை நாட்கள் காத்திருந்தாய்?'' என்று மனத்திற்குள் தவித்துருகுகிறாள். சத்திரம் போய்ச் சேருவதற்கு இன்னும் வெகு நேரமிருக்கிறது. விசாலம் வெகு தைரியமாக வண்டிக்காரனை நோக்கி, அவனுக்குப் பணம் கொடுப்பதாயும் தனக்குச் சகாயமாக இருக்க வேண்டு மென்றும் தங்களைக் காப்பாற்ற வேண்டு மென்றும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

பாபத் தொழிலைச் செய்வதற்கு உடந்தையாக விருப்பதற்கே எத்தனை நடைப் பிணங்கள் காத்திருக்கின்றன. எத்தனை விடங்

களில் இம் மாதிரியான அல்ப மனிதப் பதர்களைக் காண்கிறோம். அத்தகைய—இது போன்ற—இதற்கும் கேவலமான காரியங்களைச் செய்து உயிர் வாழ்வதே பெரிய கவுரவமாக எண்ணி யுள்ளார்கள். இத்தகைய வழியில் வயிறு வளர்க்கும் பேர்வழிகள் பேசும் நியாயமோ, சட்டதிட்டங்களோ, பிறருக்கு மத்தியஸ்தம் பேசும் நீதியின் ஒழுங்கோ கூற முடியாது. இவர்கள் பேமானித்தன்மையை பிறர் அறியார் என்று நினைப்பதானது பூனை கண் மூடிவிட்டால் பூமியே இருண்டுவிட்ட மாதிரியாக எண்ணுவது போலிருக்கிறது. "எந்த விதத்தில் அக்ரமத்திற்கு வழி யகப்படும்?'' என்றே அலையும் கோஷ்டிகளின் லீலைகள் எத்தனையோ கணக்கற்றன. நியாய வழிகளில் பணம் எப்படி வரும்? சரீர பாடுபட்டாலோ, யாசித்தாலோ தர்மமாகக் கிடைக்கும். தர்ம வழிகளுக்கு லஞ்சம் கொடுப்பதேது?

லஞ்சம் கொடுப்பது எதற்கு? ஓர் கெட்ட காரியத்தை சாதிக்கவோ, அல்லது மறைக்கவோ, ஒரு ரகவியத்தை வேண்டுமென்று வெளியிட்டுக் கெடுக்கவோ, அன்றி மறைக்கவோ, திருடவோ, திருடுவதற்கு உடந்தையாக இருக்கவோ, திருடிய பொருள்களை மறைக்கவோ, க்ஷாத்திரத்தினால் ஒருவரை யொருவர் படாப் பழி யிட்டுக் காட்டிக் கொடுப்பதற்கோ, பதவிகள் பட்டங்கள் பெறுவதற்கோ, இவை போன்ற அனேக அருமையான செய்கைகளுக்குத்தான் மேற்படி லஞ்சச் சாமியார் பிரஸன்னமாகக்கூடும். அத்தகைய நெருப்பிற்கு ஆசைப்பட்டு எரிந்துபோகும் கூட்டத்தில் இந்த வண்டிக்காரனும் சேர்ந்தவன்.

அவனுக்கு தற்போது வ்யது 70 ஆகிறது. தொழில் என்னவோ ஆதி முதல் வண்டி யோட்டுந் தொழில்தான். வண்டி யோட்டியபடியே ஏழு ஜில்லாக்களின் செய்தியும் அறிந்தவன். எண்ணிக்கையற்ற இது போன்ற செயல்களைப் புரிந்தும்—உடந்தையாக இருந்தும்—மகா அனுபவம் பெற்ற புண்ணியவான். சிலர் இவனிடம் இது போன்ற விஷயங்களுக்கு யோசனைகளும் கேட்பார்கள். தக்காருக்குத் தக்கபடியே உபாயங்களும் யோசனைகளும் கூறுவதோடு தானும் கலந்து உழைப்பான். வண்டிக்கார வரதன் என்றால் மேல்படி கோஷ்டியாருக்கும் மற்றையோருக்கும் நன்றாகத்

தெரியும். யாரேனும் ஒருவருக் கொருவர் சண்டை செய்துகொண்டு பகைவர்களை நன்ருக உதைக்க வேண்டுமென்று கூறிவிட்டால் வரதன் ஒரு கை பார்த்துத் தீர்த்துவிடுவான். இவனுடைய கையின் கீழ் பக்காத் தடியர்கள்—முறட்டு ஆள்கள்—பதின்மர் காத்துக் கொண்டே இருக்கிருர்கள்.

விசாலாக்ஷிக்கு இதுவரையில் இத்தகையோரின் பழக்கம் தேவை இல்லை. இத்தகைய விதி வந்தபிறகு என்ன செய்வது. லஞ்சச்சாமி தாஸர்களின் ஜாபிதாவை யறிந்ததில் வண்டிக்கார வரதனின் அபார சாமர்த்தியத்தையும், வீர தீரத்தையும் அறிந்து கொண்டாள். எந்த சமயம் எப்படி இருக்குமோ என்ற பயத்தினுல் இவன் வண்டியையே பேசிக்கொண்டு முன் னெச்சரிக்கையுடன் கிளம்பினுள். முதலில் தன் விஷயத்தைக் கூறவில்லை. இப்போது தெரிவித்துவிட்டாள்.

இதற் கென்றே அவதாரம் செய்துள்ள வரதன் உடனே அதற்கு இசைந்து இவர்களுக்குத் தேறுதல் வார்த்தைகளும் கூறி விட்டு வண்டியை வெகு வேகமாக விட்டான். கொஞ்ச தூரத்தில் வண்டி சென்றதும் முணுக்கு முணுக்கென்று விளக்கு எறியும் ஓர் குடிசைக்கு முன்பு நிறுத்தினுன். "கன்னி! கன்னி!" என்று வரதன் கூப்பிட்டான். உடனே ஒரு கிழவி "ஏண்டாப்பா; வரதா!" என்று கேட்டுக்கொண்டே வந்தாள். வரதன் கிழவியை அழைத்து "கன்னீ! நான்தான் இப்படி வா! ஒரு நல்ல வேட்டை கிடைத்திருக்கிறது." என்று கூறி இன்னும் ஏதோ விஷயங்களை ரகஸியமாகத் தெரிவித்தான். பிறகு இவ் விருவரையும் வண்டியை விட்டு இறக்கியதும் அக்குடிசைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

நாம் வீணுக இனிமேல் வளர்த்துவானேன். சுமார் 4, 5 மணி நேரத்தில் ஓர் அழகிய பெண் குழந்தை (மெல்லின்ஸ் புட் விளம்பரம் மாதிரி) கொழக்கு மொழக்கென்று நல்ல புஷ்டியுடனும் தலையில் குல்லாய் போட்டது போன்று அழகிய கருங் கூந்தல் சுருண்டு சுருண்டு தொங்கியவாறு "குவ்வா! குவ்வா!" என்று பெரிதாகக் கத்தியது. இத்தனை நேரம் பட்ட சிரமமும், களைப்பும், மனத் திகி

லும் பெரிய பதைப்பும் இக் குழந்தையின் தல்லியமான அழுகைக் குரலைக் கேட்டதும்—முகத்தைப் பார்த்ததும்—காமுவுக்கு ஒரு விநாடி மறந்துபோய், ஓர் புதிய அன்பே மயமான உணர்ச்சியும், தான் சொர்க்க வாசத்தி லிருப்பது போன்ற அபாரமான தோற்றமும் ஆநந்தமும் உண்டாயின்.

அடுத்த விநாடி இடி இடித்தது போன்று கண்கள் சுழல, மார்பு படபடக்க "ஐயோ! என் எதிர்கால வாழ்க்கையின் பயங்கரத் தோற்றங்கள் தெட்டெனக் கண் முன்பு தென்படுவன போலத் தோன்றிவிட்டன. தேகம் முற்றும் நடுங்கியது. கண்ணீர் பெருகுகிறது. இத்தனை வேதனையிலும் காமுவின் விழிகள் தன் குழந்தையின் மீதே சென்றன. அக் குழந்தை சில குரல்கள் கத்தியவுடனே அதை மீண்டும் கத்த முடியாமல் அக் கிழவியின் இரு கரங்களும் குழந்தையின் குவளையிலிருப்பதைக் கண்ட காமுவின் மனம் தீயை மிதித்தது போலாகி விட்டது. ஹா வென்று வாயை விட்டும் கதறி விட்டாள்.

இதற்குள் வண்டிக்காரன் வந்து "குழி தயாராகி விட்டது; வரலாம்.'' என்றான். உடனே கன்னி குழந்தையைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடக்க வாரம்பித்தாள். ஒரு நாளும் கண்டறியாத இப் பயங்கரங்களைப் பார்க்கத் தாங்காமல் விசாலத்திற்கு மயக்கம் வந்துவிட்டது. காமு தனது பலஹீனமான நிலைமையை அறவே மறந்து, அலறி யடித்துக்கொண்டு எழுந்து, கன்னியின் பின்னோடு புறக்கடைப் புறம் ஓடினாள். "அம்மா! அம்மா! உங்களுக்கு கோடி புண்ணியமுண்டு. உங்கள் காலில் விழுந்து வேண்டுகிறேன். என்னுடைய விதியை அனுபவிக்க வேண்டியவள் நான்தான். இதன் மானமோ, அவமானமோ நான் அனுபவிக்கத் தயாராகவிருக்கிறேன். என் குழந்தையை இப்படி கொடுங்கள். ஐயையோ! கொல்ல வேண்டாம்; வேண்டாம். கழுத்தை அமுக்காதீர்கள். என் குழந்தையை நான் எப்படியாவது காப்பாற்றிக் கொள்கிறேன். என்னை எல்லோரும் ஜாதிக் கட்டு போடட்டும். என்னை யாரும் சேர்த்துக்கொள்ள வேண்டாம்,

அம்மணீ! இப்படி என் குழந்தையைக் கொடுத்து விடுங்கள். அநியாயக்கார ஆண்பிள்ளையின் மாய ஜால மயக்கான மோசத்தினால் புத்தி யறியாத எனக்கு வந்த விபத்திற்கு அவனுக்கு யாதொரு கட்டும், தண்டனையும், எத்தகைய பிரஷ்டமும் கிடையாதா! எல்லா எழவும் பெண் கட்டைகளுக்குத்தான் உண்டோ? இருவரும் உருவத்தில் வேறே யன்றி பாவ புண்ணியத்தில் ஒன்றல்லவா? அந்த சண்டாளனின் விபரீத மோசத்தினால் நான் பட்ட துன்பம் போதும். ஏதுமறியாத பச்சைக் குழந்தையைக் கொல்ல வேண்டாம். வேண்டுமாயின் அதன் பொருட்டு என்னையே கொன்றுவிடுங்கள். இத்தகைய ஒரு குழந்தைக்கு உலகத்தில் பலர் ஊசி முனையில் தவம் செய்கிறார்கள். இதை அனாதையாசிரமத்தில் எந்த புண்ணியாத்துமாக்களாவது வளர்க்கட்டும். எப்படியாவது பிழைத்துப்போகட்டும். என்னைக் கொன்றுவிடுங்கள். இச்சிசுவைக் கொல்ல வேண்டாம்.'' என்று கல்லும் கரைந்துருகும்படியாகக் கூறி கன்னியின் கையிலிருந்து குழந்தையைப் பிடுங்கிக் கொண்டாள்.

ஆகா! அன்பிற்கு முன் பலஹீனமும், நோயும் தெரியவருமா! ஆனையின் பலத்தைக் கடவுள் எப்படியோ கொடுத்துவிட்டது போல கன்னியிடமிருந்து வெடுக்கெனப் பிடுங்கித் தன் மார்போடு அணைத்தவாறு குழந்தையைப் பார்த்தாள். மூச்சு இருப்பதே தெரியவில்லை. "உயிர் போய்விட்டதா! ஹா...என் கண்ணே...அம்மா! அம்மா! இப்படி வாம்மா!'' என்று தாயைக் கூப்பிட்டாள். குழந்தையை நன்றாகக் கவனித்துப் பார்த்ததில் எங்கேயோ சிறிது மூச்சு வருவது போலத் தோன்றியது.

இதற்குள் கன்னி மீண்டும் அக் குழந்தையை காமுவிடமிருந்து பிடுங்கிக்கொண்டு "போடீ வெக்கங் கெட்ட நாரி! சிறிதும் மானமின்றி வாழும் உனக்கு இந்த குலாவல் வேறு வேண்டுமா! உன் தாயார்தான் கொல்லச் சொன்னாள். எனக்கென்ன வந்திருக்கிறது? 'இந்த திருட்டுப் பிள்ளையை வைத்துக்கொண்டு எப்படிக் காலந் தள்ளுவது? இந்த சனி தொலைந்துவிட்டால் பிறகு நிம்மதி யாகிவிடும்' என்று உன் தாயார் சொன்னாள்.'' என்று கூறியபடியே குழந்தையின் மென்னியை யமுக்க முயன்றாள்.

மீண்டும் பலமான ஆவேசங் கொண்ட காமு, "ஐயோ! வேண்டாம்; வேண்டாம். என் பாபத்திற்கு, என் புத்தி பிசகிற்கு என்னுடைய குற்றத்திற்காக இச்சிசுவை ஹத்தி செய்யவேண்டாம். ஐயோ! எனக்கு வயிறு எரிகிறதே; இருதயந் துடிக்கின்றதே. இரத்தம் கொதிக்கின்றதே!" என்று பெரிதாகக் கதறியவாறு குழந்தையை மீண்டும் பிடுங்க யத்தனித்தாள்.



அச் சமயம் கன்னியின் தலை மீது ஓர் பெரிய தடிக் கம்பு விழுந்தது. ஹா வென்று அலறினள். காமு இதற்குமேல் தாங்க மாட்டாமல் மூர்ச்சித்து விட்டாள். அடுத்த நிமிடம் வண்டிக்கார வரதன், "ஐயோ! அப்பா!" என்ற பெரிய சத்தத்தோடு வெட்டிச் சாய்த்த மரம் போல விழுந்தான்.

—

7-வது அதிகாரம்.

எண்ணாத உதவி—புண்ணான இதயம்.

உலகத்தில் அன்போடு ஆதரித்து உதவ ஐந்து பேர்கள் அகப்படுவது அரிது. ஆனால் அனாவசியமாக அமளி செய்யவோ, வேடிக்கை பார்க்கவோ பெரிய கூட்டங் கூடுவது இயற்கை யல்லவா? ஒரு காக்காய் பெரியதாகக் கத்தினால் அதை வேடிக்கை பார்க்க ஆயிரம் மனித காக்காய்கள் கூடி அனாவசியமாகக் கலவரத்தை உண்டாக்குவது ஒருவேடிக்கை என்று எண்ணும்ஜனங்களுக்கு,பாரதி "அண்ணா! அண்ணா!" வென்று வீதியில் புலம்பித் தவிப்பதைப் பார்க்கக் கும்பல் சேருவது அதிசயமா? அவள் இத்தனை நாட்கள் தவித்த காலையில் உதவி புரிய ஊரிலேயே மனிதர்கள் அஸ்தமித்து விட்டார்கள். ஆனால் இச் சமயம் வேடிக்கை பார்க்கவும் தம் தம் சித்தப்படி பேசவும் வெகு எளிதில் கூடி விட்டார்கள். இவ்வித சம்பவத்திற்கு ஹேதுவானவர்களும் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் வேறு கூற வேண்டுமா!

உள்ளூற அன்புள்ளவர்கள் யாரேனும் இருப்பின் பாரதியின் நிலைமையைக் கண்டு துடிக்காமலிருப்பார்களா? அவர்கள் மனத்தைக் கரைத்து உருக்கி விடுமல்லவா! அனாதைச் சிறுமி, பேதைப் பெண். துயரத்தினாலேயே நொந்து, வெந்து, மனம் புண்ணாகிய அபலை. அவளால் இத்துயரந் தாங்க முடியவில்லை. கதறினாள்; முட்டிக் கொண்டாள். இதைக் கண்ட வள்ளியம்மாள் பாரதியைப் பிடித்து, உள்ளே அழைத்து வந்து "ஏதடியம்மா! உன் ஆகாத்யம் பெரியதாக இருக்கிறதே! பைத்தியக்கார அண்ணனை வைத்துக் கொண்டே இந்தப் பாடு படுகிறாயே, சரியான அண்ணனாக இருந்தால் என்ன செய்வாயோ! அவர்களென்ன உன் அண்ணனைக் கடித்தா விழுங்கி விடுவார்கள். நல்ல சிகிச்சை செய்து குணப்படுத்தி யனுப்புகிறார்கள். பிறகு குலாவுகிறது தானே. இதற்கு இத்தனை தடபுடல் செய்ய வேண்டுமா?

வாஸ்தவத்தில் எனக்கு இங்கு வந்த நாள் முதல் தூக்கமே கிடையாது. சொந்த மனுஷியானால் மட்டும் இம்சை இம்சைதானே,

நீயும் அறியாப் பெண். தினம் இரவும் பகலும் தூக்கம் விழித்தால் எப்படி உடம்புக்குச் சரியாகும். வயதான கிழப் பிணம் எனக்கே தூக்கமின்மையால் உடம்பு கெட்டு விட்டது. முதலில் ஜீரணங் குறைந்து விட்டது. அதனால் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டுவிட்டது. இன்னும் சில காலம் சென்றால் வெவ்வேறு வியாதிகள் வரும். இதென்ன அசட்டுத்தனம்! வாயை மூடடீ!'' என்று பெரிதாக அதட்டி ஒரு போடு போட்டாள்.

பாரதியின் நெஞ்சோ பதறிப் பறக்கின்றது. இந்த அம்மாள் கூறுவது முற்றும் காதில் நாராசம் போல விழுகிறது. உண்மையான அன்பிருக்கிறவர்களுக் கன்றோ அதனதன் இன்பமோ, துன்பமோ தெரியும். கூலிக்கு மாரடிப்போருக்கும், வேஷத்திற்குப் பாடு படுவோருக்கும் தீராப் பொறியாக இருப்போருக்கும்—வயிறு வளர்க்க வந்தவர்களுக்கும்—எப்படி இந்த உணர்ச்சிகள் தெரியும். "ஹா! நான் என்ன பாபத்தைச் செய்தேன்! சீச்சீ! இப்படியும் ஜென்மம் இருக்குமா! பெத்த பிதா......பெத்த மாதா......இருவரும் காண முடியாது பறந்து விட்டனர். உடன் பிறந்த அண்ணனின் கதி இப்படியா ஆக வேண்டும்? ஐயோ! அங்கு என்ன செய்வார்களோ! அவன் கத்துவதற்கும், பேசுவதற்கும் அடிப்பார்களோ! திட்டுவார்களோ! சீறி விழுவார்களோ! பசியறிந்து ஆகாரம் கொடுப்பார்களா'' என்றவை போன்ற எண்ணங்களினால் பின்னும் தவிக்கிறாள்.

அவள் வள்ளியம்மாளுடைய வார்த்தையின் கருத்தை யறிந்து விட்டதால் பதிலே பேசவில்லை. தன் விதியை எண்ணி வருந்துகையில் தபால்காரன் ஒரு கவரைக் கொணர்ந்து கொடுத்தான். இந்த அயோமயமான விசனத்திற்குச் சற்று ஆறுதல் கொடுத்ததுபோலும் தேறுதல் கூறுவது போலும் இந்த கடிதம் கிடைத்ததும் ஒரு சிறிது மகிழ்ச்சி யடைந்தாள். கண்ணைத் துடைத்துக் கொண்டு அக்கடிதத்தை உடைத்துப் படிக்கலானாள்.

"என் ப்ரிய மாதரசீ! பெண்கள் திலகமே! உன் கடிதம் கிடைத்தது. அது கிடைத்த நேரமானது நான்...அ...கா மன்னிக்கவும். அதிகப் பிரஸங்கியாக ஆரம்பித்ததற்கு மன்னிக்க வேண்டும். தவறிப் போய் ஏதோ ஞாபகமாக எழுதத் தொடங்கி விட்டேன். அம்மணீ! சென்ற வாரத்தில் இங்கு ஓர் (மேச்சு) பந்தாட்டம் நடை பெற்றது. அதில் நான் ஆடும்போது எதிரியின் பந்து வேகமாக வந்து என் முட்டியைத் தாக்கிவிட்டு ஓடியது. அதனால் நான் நடக்க மாட்டாது தவிக்கிறேன், என் சிநேகிதர்கள் சதா அருகிலேயே இருந்து கவனித்து ஒத்தடங்கள் கொடுத்து, மருந்துகளைத் தேய்த்து பாடுபட்டு வருகிறார்கள். தற்போது சற்று குணம்

எனினும் தாராளமாகக் காலை நீட்டி, மடக்கி நடக்க முடியவில்லை. வீக்கம் குறைந்திருக்கிறது; கவலைப்பட வேண்டாம்.

மாசிலாமணியின் நிலைமை எவ்வித மிருக்கிறது? சற்று குண மாக விருக்கு மென்று நம்புகிறேன். அநேகமாக அடுத்த வாரம் அங்கு வருகிறேன். தங்களுடைய பந்துக்களில் யாரோ தமக்குத் துணையாக வந்திருப்பதாக எழுதி இருப்பது பற்றி மிக்க சந்தோஷப் படுகிறேன். தாங்கள் சதா காலமும் விசனப்பட்டுக் கொண்டிருப்ப தாகக் தெரிவித்தது மிகவும் வருத்தமாக விருக்கிறது. எத்தனை விசனித் தாலும் பயன் என்ன இருக்கிறது? காரியம் ஆவது போலல்லவா ஆகும். சோதனை! சோதனை என்று எழுதுகிறீர்களே! அம்மணி! நான் சோதனையின் கொடுமைகளைப் பற்றிய ஒரு புத்தகத்தை இப் போது தான் படித்தேன். ஆகா! அதைப் படித்தீர்களானால் தங்களு டைய சோதனைகள் எந்த மூலையோ என்று தோன்றும். அதைத் தாங்கள் அவசியம் படித்து அந்த கதாநாயகியைப் போல பொறுமை வகிக்கப் பழக வேண்டும் என்று தோன்றுவதால் அதைத் தபாலில் அனுப்பி இருக்கிறேன். பொறுமையின் அதி. அவசியத்தைப் பற்றிய இன்னொரு அற்புதமான புத்தகத்தையும் சேர்த்து அனுப்பி இருக்கிறேன். இவைகளைக் கட்டாயம் படித்து உங்களது உணர்ச்சி யை எழுதுங்கள்.

அம்மணி! சதா வருந்திக் கண்ணீர் விட்டு உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள். தாங்களும் வியாதியால் படுத்து விட்டால் மாசி லாமணியைக் கவனிப்பது யார்? இவைகளை யோசித்துத் தம்மை தேற்றிக் கொள்ளுங்கள். வேறு விசேஷமில்லை.

இங்ஙனம்:
ராஜசேகரன்''.

அக்கடிதத்தைப் படித்துப் பார்த்ததும், பாரதியின் மனம் இன்பமும் துன்பமும் அடைந்தன. "இப்போது நடந்த சம்பவ மறிந்தால் என்ன சொல்வாரோ!'' என்று தவித்தாள். உடனே பதில் எழுதத் தொடங்கினாள்.

"அன்பு மிக்க ஐயா!

வந்தனங்கள். தங்கள் கடிதம் கிடைத்த நேரத்தை நான் தங் களைப் போன்று மழுப்பாது உண்மையிலேயே கூறுகிறேன். எனது கரை இல்லாத துயர வேளையில் சற்று என்னைத் தேற்றும் அருமருந் தாகவே கிடைத்தது என்பதை மறைக்காமல் கூறுகிறேன். மனத்தில் தோன்றாத விஷயத்தைத் தோன்றியதாக எழுதுவது பிசகு. தோன் றியதை ஒளிக்க வேண்டிய அவசியம் இவ்விடத்திலில்லை என்றே

நினைக்கிறேன். நிற்க, தற்போது இவ்விடமுள்ள நிலைமையை என்னால் கூறவே முடியாது.

வேண்டுமென்றே யாரோ க்ஷாத்திரத்தினால் என் அண்ணனால் மிக்க பயங்கரமும், ஆபத்தும் விளைவதாகவும் தமக்குத் தொந்திரவாக விருப்பதாயும் போலீஸுக்குத் தெரிவித்து, போலீஸார்கள் வந்து அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்கள். இந்த விசனத்தில் என் மனம் தத்தளிக்கின்றது. அதே நினைவாக ஏங்குகின்றது. இருதய பூர்வமான அன்புள்ளவர்களுக்குத் தான் எந்த விதமான தவிப்பும் நன்ருகத் தெரியவரும். வெளியார் இதைப் பற்றி என்ன செய்யக் கூடும். ஏளனம் செய்து பரிகஸித்தும், வம்பு பேசியும் இன்னும் புண் படத்தான் செய்வார்கள். தற்போது எனக்கு ஆற்றுவாறு மில்லை; தேற்றுவாறு மில்லை. ஆனால் தூற்றுவாரும் தூஷிப்போரும் வேண்டிய பேர்களுண்டு.

இச்சமயத்தில் தங்கள் கடிதம் கிடைத்ததால் அதையே ஓர் ஆறுதலாகக் கொண்டுள்ளேன். உங்கள் காலில் அடி பட்டது என்றதைக் கேட்டு வருத்தமாக விருக்கிறது. வேளையின் கொடுமைக்கு யார் என்ன செய்து வருந்திப் பயனுண்டாகும்?. தங்கள் விருப்பப் படியே அவ்விரு புத்தகங்களையும் படிக்க ஆவலுள்ளவளாக விருக்கிறேன். தங்கள் உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளவும்.

ஐயா! அடிக்கடி 'மன்னியுங்கள்'. என்ற பதம் வேண்டாம். மன்னிப்பதற்கு ஈசன் ஒருவனிருக்கிறான். அக் கவலை நமக்கு ஏன்? தவருது கடிதம் எழுதுங்கள். தாங்கள் எங்களுக்குச் செய்த பேருதவிக்கு நான் இச் சமயம் தங்களருகிலிருந்து ஊழியம் செய்யவும் சக்தியற்ற நிலைமையில் இருக்கிறேன். வாயால் வெட்டிப் பேச்சு உரைத்து என்ன பயன்! தங்கள் வரவை எதிர்பார்க்கிறேன். தங்களை ஒரு விஞடியும் நினையாம விருக்கக் கூடவில்லை என்பதை மட்டும் தெரிவிக்கும் பேதை... ...பாரதி.''

இதை உறையிலிட்டு வீதிக் கோடியிலுள்ள தபால் பெட்டியில் போட்டுவிட்டாள். வள்ளியம்மாளின் ஆட்சியில் குரல் பலக்கவும், உத்திரவுகள் பிறப்பிக்கவும் ஆரம்பமாயிற்று. பாரதிக்கு தன் அண்ணனைப் போய் பார்க்க வேண்டுமென்று ஆவல் அதிகமாயிற்று. எப்படி அங்கு செல்வது. இவளிருக்குமிடத்திற்கும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கும் வெகு தூரமிருக்கிறது. அதை யோர் தனித்த ஊர் என்றே கூறலாம். வாணீபுரத்திற்கு 30 மைல் தூரத்தில் இவ் வாஸ்பத்திரிக் கென்று தனிக் கட்டடம் கட்டி இருக்கிருர்கள். அங்கு மோட்டாரில் செல்ல வசதி யுள்ளவர்கள் சவுகரியமாகச் செல்லலாம்.

தனியாக மோட்டார், பஸ்ஸோ செயிலோ கிடையாது. அனைதைச் சிறுமி யாரைப் பிடித்தால் இவளைப் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வார்கள்?

செய்யும் வகையே அறியாது பாரதி தவிக்கின்றாள். அண்ணனின் நினைவே வாட்டுகிறது. வெகு நாட்களாக அவ்விடத்தி லிருப்பினும் திடீரென்று யாருடைய உதவியைக் கோர முடியும்? யாரை நம்பித் துணைக்கு அழைத்துச் செல்ல முடியும். ஓர் தனித்த காட்டி லிருக்கு மிடத்திற்குத் தனிமையில் செல்வதென்பது மிகவும் பயங்கரமானது. அக்கம் பக்கம் இருப்பவர்களே இம்மாதிரி த்வேஷமாக எழுதிவிட்டதால் அவர்களின் உதவியைக் கோர வேண்டியதே இல்லை. இரவு பகலாக இதே ஏக்கமாகி மெலிய வாரம்பித்தாள்.

அவ் வூரில் சிறிய தேவாலயம் ஒன்றிருக்கின்றது. பிரதி தினமும் மாலை வேளையில் சென்று பிரதக்ஷணம் செய்து அந்த ஸ்வாமியை வணங்கி தன் அண்ணனுக்குச் சீக்கிரத்தில் குணமாக வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வாரம்பித்தாள். சில வம்பு பேசும் பிராணிகள் கோயிலையே அதற்கு முக்கிய ஸ்தலமாக்கிக்கொள்வதுண்டு. கோயிலில்தான் பல மனிதர்கள் சுவாமி தரிசனார்த்தம் வருகிறார்கள். ஒருவரைப் பற்றி ஒருவருடனும் இன்னும் ஊர் வம்புகளையும் கொட்டி யளந்து சஹஸ்ர நாமம், ஸ்தோத்திர பாடம், ஜபம் முதலியன செய்வதற் கொப்பாகப் பேசிவிட்டு வீடு செல்வதே சிலருக்குத் தொழில்.

பாரதி தினம் பிரதக்ஷணம் செய்ய வரும்போதெல்லாம் சிலர் அவளைப் பார்ப்பதும், குசு குசுவென்று "அதாண்டீ; அந்த பயித்தியக்காரனின் தங்கை. தூக்குப் போட்டுக் கொண்டாளே, அவள் பெண்! குதிரை மாதிரி இருக்கிறாள் பாரு! என்ன தைரியமடி யம்மா!' என்று பேசி, வலுவில் பாரதியை நோக்கி "ஏண்டி உன் அண்ணனின் பயித்தியம் எப்படி இருக்கிறது? தடியாலும் தாம்பாலும் எல்லோரையும் அடித்து விரட்டினானமே: என்னமோம்மா! ஊரார் கூறுவதுதான். எங்களுக்கு என்ன தெரியும்? சாப்பாட்டிற்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று சம்மந்த மில்லாத வார்த்தைகளை எல்லாம் கேட்டு வாயைக் கிளறுவார்கள்.

மகா புத்திசாலியான பாரதி இந்த வம்பிற்கு இடங் கொடாமல் பேசாது மயில் போலப் போய்விடுவாள். இந்த வம்புக் கூட்டத்தைக் கண்டாலே பயம் நடுங்கும். தன் வேலையுண்டு, தானுண்டு என்றது போல தினம் ப்ரதக்ஷணம் செய்கையில், ஒரு தினம் அக் கோயிலில் ப்ரம்மாண்ட பூஜைகளும், அபிஷேக ஆராதனைகளும் நடந்தன. இதைக் கண்ட நமது நங்கை நல்லாள் இன்று

ஏதோ உத்ஸவம் என்று எண்ணி பிரதக்ஷணம் செய்து கொண்டிருக்கையில் ப்ராகாரத்தில் சிலர் பேசிக் கொண்டிருந்தது இவள் காதில் விழுந்ததால், சற்று நிதானமாகப் பிரதக்ஷணம் செய்ய வாரம்பித்து சம்பாஷணையைக் கவனித்தாள்.

முதல்வன்:—ஆமாம். நான் நேற்றே சொல்லவில்லையா! முல்லையூர் ஜமீந்தாரின் மகனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாம். அதனால் மிக்க வருத்த முற்றார்களாம். இங்கெங்கேயோ பயித்தியக்கார ஆஸ்பத்திரி இருக்கிறதாமே. அங்கு அவனைக் கொண்டு விட்டார்களாம். வெகு நாட்கள் கழித்து இப்போது குணமாகி விட்டதாம். அந்த மகனை அழைத்துக்கொண்டு போகிறார்களாம். இந்த ஊர் ஸ்வாமிக்கு வேண்டுதல் செய்து கொண்டார்களாம். அதற்காகத் தான் இன்று இத்தனை தடபுடலாக உத்ஸவம்.

இரண்டாமவன்:—ஆமாம். ஆமாம். காலையில் எல்லோருக்கும் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு ஜோடி வேஷ்டி, ஒத்தை ரூபாய் எல்லாம் கிடைத்தன. போகட்டும். அவர்கள் மனம் சந்தோஷ மடைந்தது. மகன் தீர்க்காயுஸாக இருக்கவேண்டும்—என்று பேசிக்கொண்டிருக்கையில் பெருந் திரளான கூட்டம் அங்கு வருவதைக் கண்டு அவர்கள் போய்விட்டார்கள்.

இதை தூரத்திலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பாரதியின் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகியது. மாசிலாமணியின் பிம்பம் கண்ணெதிரில் காக்ஷி கொடுத்தது. மனம் பதபத வென்று அடித்துக்கொண்டது. பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து வந்தவர்களை விசாரித்தால் தன் அண்ணனின் விஷயம் தெரியவரும் என்ற பேராவல் உதித்தது. ஆதலால் அவள் வெட்கமும் துக்கமும் அடைந்து நாணிக் கோணி ஒரு புறமாக நின்றிருந்தாள்.

ஜெமீந்தார் கோஷ்டியினர் வெகு சந்தோஷத்துடன் அம்மன் சன்னிதானத்திற்கு வந்தார்கள். இக் கூட்டத்து மத்தியில் ராஜ வடிவுடன் நிற்பவகன்தான் பயித்தியம் பிடித்து குணமடைந்தவன் என்று அவனை நடத்தும் மாதிரியில் தெரிந்துகொண்டாள். ஒருவரையும் முன்பின் தெரியாமையினால் யாரைப் போய் எவ்விதம் விசாரிப்பது என்ற பெரிய கவலை யுண்டாகியது. அவர்களோடு கூட்டத்துடன் கூட்டமாக அம்மனைச் சேவித்தாள்.

அவர்கள் எல்லா சன்னிதானங்களிலும் சேவித்துவிட்டு வெளிப் பிராகாரத்திற்கு வந்தார்கள். வீதியில் 10–15 மோட்டார் கார்கள் நிற்பதையறிந்தாள். "அவர்கள் இனிமேல் நேரில் மோட்டார் காரில் சென்றுவிடுவார்கள். அதற்குள் நாம் வெட்கத்தை விட்டுக் கேட்டுத்தான் தீரவேண்டு"மென்று துணிந்து முல்லையூர் ஜமீந்தாரினி

யின் எதிரில் சென்று காலில் விழுந்து வணங்கி "தாயே! நான் முன் பின்னறியாதவள் இத்தனை தைரியமாகத் துணிபுடன் தங்கள் முன்பு வந்ததற்கு மன்னிக்க வேண்டும்: நான் ஓர் அனாதைச் சிறுமி. என்னால் தடுக்கக் கூடாமலிருக்கும் ஒரு அவாவினால் இங்கு வந்தேன். தங்கள் குமாரரின் விஷயத்தை இங்கு கேள்வியுற்றேன்.

தாயே! என்னுடைய அண்ணன் சமீபத்தில்தான் அந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கிறான். நான் மகா பாவி! மனித சகாயமும், த்ரவ்ய சகாயமும் அற்ற அனாதை. என் பகைவர்களின் சூழ்ச்சியினால் அவன் அங்கு செல்ல நேர்ந்தது. திக்கற்ற எனக்கு அங்கு அவன் எந்த நிலைமையில் இருக்கிறான் என்பதை அறிய முடியவில்லை. தாங்கள் என்மேல் கிருபை கூர்ந்து அவன் விஷயத்தைத் தங்கள் மகனிடம் கேட்டு அறிவிக்க வேண்டும். இந்த உபகாரம் செய்தால் போதும். என்றென்றும் நான் நன்றி யுள்ளவளாக இருப்பேன்." என்று கெஞ்சியவாறு கண்ணீர் பெருகக் கேட்டாள்.

இதைக் கேட்ட ஜெமீந்தாரினியின் மனம் கரைந் துருகியது. "ஐயோ, பாவம்! உன் அண்ணனுக்காம்மா பயித்தியம் பிடித்திருக்கிறது. அந்தோ! பரிதாபம். பரிதாபம். அம்மா! கண்ணீர் விடாதே: இதோ கேட்டுச் சொல்கிறேன். "அப்பா! குருராஜா! இந்தப் பெண் மணி ஏதோ கேட்கிறாள். இதற்குப் பதில் கூறு." அம்மா! இவன் உன் உடன் பிறந்த சகோதரன் மாதிரி. வித்யாச மில்லாது கேட்டுக் கொள்ளம்மா!" என்றாள்.

பாரதி மிக்க வணக்கத்துடன் அவ் வாலிபனை நோக்கி "ஐயா! சென்ற வாரம் மாசிலாமணி என்ற ஓர் வாலிபன் அங்கு வந்திருக்கிறான். அவனுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது. அவனை அங்கு எப்படி கவனிக்கிறார்கள், அவன் எவ்வித மிருக்கிறான் என்பதையறியவே நான் காத்திருக்கிறேன். தயவு செய்யவேண்டும்" என்றாள்.

நன்றாக தெளிந்து குணமாகிவிட்ட குருராஜன் இதைக் கேட்டு மிக்க விசனத்துடன் "ஆகா! அவன் தங்களுடைய சகோதரனா! ஐயோ, பாவம்! மிகவும் பரிதாபகரமான நிலைமையில்தானிருக்கிறான். சதா கூச்சலிட்டு, லபோதிபோ என்று அடித்துக் கொள்கிறான். எதிரில் கண்டவர்களை எல்லாம் அடித்து இம்சை செய்கிறான். அதற்காக அவனுக்கு விலங்கு மாட்டி இருக்கிறார்கள். ஆகாரம் சாப்பிடப் படுத்துகிறான். அதட்டி, அடித்து, மிரட்டிச் செலுத்துகிறார்கள். பார்க்க மிகவும் கண்ராவியாக இருக்கிறது" என்று இவன் சொல்வதைக் கேட்டதும் பாரதியின் மனம் தாங்காது "ஐயோ! அண்ணா!" வென்று விம்மி விம்மி அழ வாரம்பித்து விட்டாள்.

பரிதாபமான இந்த கோரக் காட்சி எல்லோருடைய மனத்தையும் உருக்கிவிட்டது. பாரதி புலம்பிக்கொண்டே "ஐயா! அங்கு சென்று அவனைப் பார்க்க முடியுமா! நான் பரம ஏழை; பரம அனாதை; என்னை உள்ளே விடுவார்களா? நான் பார்க்க வேண்டுமே! என்ன செய்வேன்?" என்று கண்ணீர் விட்டாள்.

குரு:—அம்மா! புலம்பாதீர்கள். விதியை வெல்ல யாரால் முடியும்? என் தலைவிதியை அனுபவித்ததை எண்ணினால் பயமாக விருக்கிறது. என் மாமன் தேசியத்திற்காக சிறைச்சாலையில் இருந்தார்கள். அங்கு கூட இத்தனை நிர்ப்பந்த மில்லை என்று அவர் கூறுவதுண்டு. அத்தனை கட்டும் காயிதாவும் இங்கு உண்டு. இதற்காகத்தான் ஓர் தனிக் காட்டில் அந்த ஆஸ்பத்திரியை நியமித்திருக்கிறார்கள். யாரையும் இலேசில் விடுவதே கிடையாது. எத்தனையோ உபத்திரவம். என் தாயார் தகப்பனார் வந்து பார்ப்பதற்கும் எத்தனையோ கஷ்டப்பட்டுத் தவித்தார்களாம். கடவுளை நம்பி விதியே என்று இருக்க வேண்டுவதுதான். வேறு கதி இல்லை.

பாரதி:—ஐயோ! அங்கிருப்பவர்களுக்கு இருதயம் இல்லையா! பச்சாத்தாபம் கிடையாதா! தயை தாக்ஷிண்யமற்றவர்களா! தெளிந்து வீட்டுக்கு வந்தால்தான் அவனைப் பார்க்கலாம்; இல்லையேல் உயிருடன் தத்தம் தானா! என்ன செய்வேன்? ஐயா! அம்மா! தாங்கள் எவ்விதமாவது கிருபை செய்து ஒரு முறை என் அண்ணனைப் பார்க்கச் சிபார்சு செய்ய மாட்டீர்களா! இப் பேதையின் மீது மனமிரங்க மாட்டீர்களா?—என்று கூறியபடியே அவ் விருவர்களின் காலிலும் விழுந்து கலங்கினாள்.

குருராஜப்பாவின் மனைவி—துரும்பென மெலிந்து போய் அக் கூட்டத்து மத்தியில் நின்றவள்—பாரதியின் பரிதாபத்தைக் கண்டு மனம் சகிக்காமல் மாமியிடம் சென்று "அம்மா! இம் மாதரசியின் தவிப்பு எத்தகையது, எப்படி இருக்குமென்பது எனக்குத் தெரியும். ஆகையினால் இம் மங்கையை நாளைய தினம் நம்முடைய காரில் அழைத்துச் சென்று அவள் அண்ணனைப் பார்க்கச் செய்து அழைத்து வரலாம். ஐயோ பாவம். இந்த உபகாரம் செய்யுங்கள்." என்று வேண்டினாள்.

இதைக் கேட்ட மாமியும் அதற்கு இசைந்து "அம்மா! நீ எங்கிருப்பது? உன் விலாசத்தைத் தெரிவியம்மா! உன்னை நாளைய தினம் அழைத்துச் செல்கிறேன். நாங்கள் இப்போது ஊருக்குப் போகிறோம். அங்கு இன்று பெரிய விருந்து நடக்கப் போகிறது. அனேக பெரியார்கள் அங்கு காத்திருப்பார்கள், நாங்கள் போகவேண்டும்,

நீயும் எங்களுடன் வருகிருயா! அங்கிருந்தே அழைத்துச் செல்கி ரோம்'' என்ருள்.

இது கேட்ட பாரதி "அம்மணி! தாங்கள் என்னை அழைத் துச் செல்வதாக வாக்குக் கொடுத்ததொன்றே எனக்குப் போதும். என் பவிஷுக்கு விருந்து சாப்பாட்டிற்கு வரவேண்டுமா? தாயே! சந்தோஷமற்ற சங்கட நிலைமையிலிருக்கும் எனக்கு எங்கும் வர மன மிசையவில்லை. மன்னிக்கவேண்டும். நாளைய தினம் இதோ இக்கோயி லுக்குப் பக்கத்துத் தெருவில் 20-வது நம்பர் வீட்டில் நான் இருக் கிறேன். அங்கு வந்து தயவு செய்து அழைத்துச் செல்லுங்கள். சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும்'' என்று மீண்டும் வணங்கினுள்.

"அம்மா! வருந்தாதே! இதென்ன பிரமாதம்! நீ தயாராக விரு. நாங்கள் பகல் 2 மணிக்கு வருகிருேம்.'' என்று கூறிவிட்டுப் பிறகு எல்லோரும் தம் தம் மோட்டாரில் ஏறிக்கொண்டு போய்விட் டார்கள். பாரதிக்கு மனத் துயரம் மலைபோல விருப்பினும் இங்கு நடந்த சம்பவங்கள் சற்று சந்தோஷத்தைக் கொடுத்தன. மறு நாள் எப்போது வரும் என்ற எதிர்பார்ப்பு இப்போதே உண்டாகிவிட்டது. அதற்குமேல் கோயிலிலிருந்து வீட்டுக்கு வந்தாள். மறு தினம் பகல் இரண்டு மணியை எதிர் நோக்கியபடியே காத்திருந்தாள்.

அன்று இரண்டு மணிக்குச் சரியாக கார் வந்து விட்டது. ஏழைப் பெண்ணான பாரதியின் வீட்டு வாசலில் மோட்டார் வந்து நின்றதும் அதை வேடிக்கை பார்க்க வீதி முற்றும் கூட்டங் கூடி விட்டார்கள். பாரதி வள்ளியம்மாளை நோக்கி "பாட்டி! இவர்கள் ஆஸ்பத்திரிக்கு என்னை அழைத்துச் செல்கிருர்கள். அங்கு சென்று அண்ணனைப் பார்த்து விட்டு வருகிறேன்.'' என்று கூறி விட்டு அவர்களோடு வண்டியிலேறிக் கொண்டு போய் விட்டாள்.

லோகாபிராமமாக அவர்கள் பேசிக்கொண்டே செல்கிருர்கள். பாரதியின் எண்ணம் முற்றும் அவளுடைய அண்ணனிடத்திலேயே இருந்ததால் ஏதோ பதில் கூறிக் கொண்டே வந்தாள். ஆஸ்பத்திரி வெகு தூரத்திலிருப்பதால் வெகு நேரம் வண்டி சென்றது. பிறகு சுமார் 4 மணிக்கு ஆஸ்பத்திரி வாசலில் வந்து நின்றது. அவர்கள் இறங்கி அதிகாரியைக் காணச் சென்ருர்கள். அதிகாரிக்கு முன் இரவு முதல் கடுமையான ஜுரம் வந்திருப்பதாயும், அவர் இங்கு வரவே இல்லை என்றும் பதில் கிடைத்து விட்டது.

என்ன செய்வார்கள் பாவம்! மாசிலாமணியைப் பார்க்க வேண்டுமென்று அவனுடைய சகோதரி வந்திருக்கிருர்கள் என்பு

தாக அவர்கள் கூறினார்கள். அதற்கு அந்த குமஸ்தா, "இங்குள்ள விதிகள் தாக்குத் தெரியாதா! அதிகாரியின் உத்திரவின்றி நாங்கள் எதுவும் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் எங்களுக்குத்தான் ஆபத்து. ஆகையினால் நான் ஒன்றும் செய்ய மாட்டேன். அதிகாரியிடம் உத்திரவு பெற்று வந்தால் பார்க்கலாம்." என்று கண்டிதமாகக் கூறிவிட்டுப் போய் விட்டான்.

இதைக் கேட்ட பாரதியின் மனம் உடைந்தது. அண்ணனைக் காண எண்ணிய ஆசை எல்லாம் இடிந்தது. "ஐயோ! என்னுடைய துரதிருஷ்டம் நிழல் போல இங்கும் தொடர்ந்து எனக்கு முன்பே வந்து விட்டதே! ஹா! என் பொருட்டு உங்களுக்கெல்லாம் பெரிய சிரமத்தைக் கொடுத்தேனே. என் செய்வேன்? என் ஆசை அண்ணனை என்று பார்ப்பேன்? இனி எனக்கு இவ்வாறு உதவி செய்பவர்கள் யாரிருக்கிறார்கள்?" என்று புலம்பினாள்.

இதற்கு மேல் என்ன செய்வார்கள் பாவம். எத்தனையோ பிரயத்தனம் செய்ததெல்லாம் வீணாயிற்று. பாரதிக்குத் தேறுதல் கூறி அவளை மீண்டும் அன்போடு வீட்டில் கொண்டு விட்டு விட்டு "அம்மா! இன்னொரு நாள் நாங்கள் உன்னை யழைத்துச் செல்கிறோம் கவலைப் படாதே! என்ன செய்யலாம்? துன்பத்தை யளித்துச் சோதிப்பது கடவுளின் ஒரு லீலை. நாங்கள் இப்படித்தான் தவித்தோம். ஏதோ ஈசனின் கருணையினால் நற்கால உதயமாகியது. அதுபோல உனக்கும் நற்காலம் பிறக்கும்." என்று தேற்றினார்கள்.

இது கேட்ட பாரதி "அன்பர்களே! எனது எண்ணத்தில் இல்லாத பெருந் துணையாக—எண்ணாத உதவியாளராக—நீங்கள் அமைந்தும் என் புண்ணான இருதயத்தின் ரணம் ஆறும் காலம் வரவில்லை. இன்னும் புண்ணாகித் தவிக்கச் செய்யவே என் விதி யமைந்தது போலும். என் மேல் அன்பு காட்டியதற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?" என்று கூறி வந்தனஞ் செய்து பின்னர் விடை பெற்றுக் கொண்டு இறங்கினாள். அவர்கள் போய் விட்டார்கள்.

பாரதி விசனமே வடிவாக உள்ளே சென்றாள். அந்தோ! பயங்கரம்! பயங்கரம்!! வள்ளியம்மாளின் இரு கண்களும் கோவைப் பழம் போலச் சிவந்து கோபாக்கினி தாண்டவமாடுகின்றது. அவள் கையில் ஒரு கடிதத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டு பாரதி திடுக்கிட்டாள். பின்புறமிருந்து பார்த்ததில் அக் கடிதம் ராஜசேகரனுடையது என்றது தெரிந்ததும் பின்னும் இடிந்து போய், புண்ணில் கோலிட்டது போலான சகிக்கொணா வேதனை

யடைந்து "ஐயோ! ஏதோ விபரீதத்திற்குத்தான் இந்த நிகழ்ச்சி நிகழ்ந்து இக் கடிதம் இவளிடம் கிடைத்து விட்டது." என்று அபாரமான திகிலடைந்து, துவண்டு நின்று விட்டாள்.

8-வது அதிகாரம்

யுவர்களின் கொண்டாட்டம்—யுவதியின் திண்டாட்டம்.

"உலகத்தில் எத்தகையோருக்கும் அன்பு, தைரியம், தன்னம்பிக்கை முதலிய நற்குணங்கள்தான் கல்லின்மேல் எழுத்து போன்று பிரகாசிக்கின்றன. அத்தகைய சிறந்த குணாளர்களின் புகழ் எந்த காலத்திலும் ஜ்வலித்து மக்களின் அறிவை வளரச் செய்கிறது. இக் கூட்டத்தில் சேர்ந்தவர்களில் நமது ராஜசேகரனும் ஒருவனென்றே நாம் கூற வேண்டும். அவனுடைய இதயம் எப்போதும் ஏதேனும் ஒரு நல் விஷயத்தைச் சிந்தித்தோ, அன்றி பிறர் நலம் நாடியோ, அல்லது பந்தாட்டத்திலோ சென்று சதா சஞ்சரித்துக் கொண்டே இருக்கும், இத்தகைய எண்ணங்களினாலேயே தன்னை மறந்து ஆநந்திப்பது ஓர் தனித்த இன்பமாகும். இதை யனுபவித்தோருக்கே இதன் ருசி தெரிய வரும்.

ராஜசேகரன் மாசிலாமணியையும் பாரதியையும் விட்டுப் பிரிந்து வந்த நாள் முதலாக அவர்களுடைய நினைவு இவன் மனத்தை விட்டு அகலவே இல்லை. சதா அவர்களையே நினைந்திருப்பதும் அது விஷயமாக யோசிப்பதுமாக விருந்தான். காலில் பந்து பட்டு அடிபட்டு விட்டதால் சில தினங்கள் இடை விடாது படுக்கையோடிருக்க நேர்ந்து விட்டது. அக்காலைகளில் தனித்த மானஸ உலகத்தில் சஞ்சரித்து இன்பமடைவான். அவ்வாறு இருக்கும் காலங்களில் பாரதியின் வாடி வதங்கிய முகமும், கண்ணீர் பெருகியவாறு நின்ற தோற்றமும் கண் முன்பு தாண்டவமாடும். மாசிலாமணியின் கோரமான நிலைமையின் காட்சி ஒரு புறம் தோன்றும். இவைகளைக் கண்டு

ஆநந்தத்தித்தவாறே இருந்தான். பாரதியின் கடிதங்களைக் கண்டு சந்தோஷப் படுவான்.

தனக்கு உடம்பு குணமானதும் தான் ஊருக்குச் செல்ல வேண்டுமென்று தினத்தை எதிர் பார்த்துக் கொண்டே இருந்தான். காலில் அடி பட்டிருந்த வீக்கமும் வடிந்து நன்றாகக் குணமாகி எழுந்து நடக்கும்படியாகி விட்டது. லீவு முடியும் தினத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கையில் இவனுடைய கலாசாலையின் மாணவர்களும் உபாத்திமார்களும் ஒன்று கூடி இந்த விடுமுறைக்கு எல்லோரும் கிளம்பி க்யாம்பு சென்று சில முக்கிய இடங்களி லுள்ள வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டு சந்தோஷமாக வருவ தென்று தீர்மானித்து விட்டார்கள். அக் கோஷ்டியில் நமது ராஜ னும் ஒருவனாகையினால் அவனும் அதில் சேர்க்கப் பட்டான்.

ராஜன் நினைத்திருந்ததற்கு மாறாக இவனுடைய பிரயாணம் வேறுபட்டு விட்டதானது மிக்க விசனத்தையே கொடுத்தது. எனினும் உபாத்தியாயர்கள் மாணவர்கள் எல்லோரும் கட்டுப் பாடாகக் கிளம்புகையில் தான் மட்டும் வர முடியாதென்றால் அது நன்றாக இருக்காதென்றதால் அவனும் ஒத்துக் கொண்டான். குறித்த நாளில் எல்லோரும் பம்பாய்க்குப் புறப்பட்டார்கள். இளைஞர் கூட்டத்தின் களியாட்டத்தைக் கேட்க வேண்டுமா! ஒருவரோ டொருவர் சிரித்து மகிழ்ந்து கொம்மாளமிட்டுப் பேசுவதும், பாடு வதும் வெகு குதூகலமாகச் செல்கிறார்கள். ராஜசேகரனும் இக்களி யாட்டத்தில் கலந்து கொண்டுதான் செல்கிறான் எனினும் மனம் முற்றும் வேறு வகையில் வேலை செய்து கொண்டே இருக்கிறது. தான் எண்ணியபடி நடக்க வில்லையே என்கிற ஏக்கம் ஒரு புறம் பாதிக்க அவைகளை யடக்கிக் கொண்டு சந்தோஷ நடிப்புடனேயே சென்றான்.

இடை யிடையே காணும் இயற்கை யழகையும் விநோதங் களையும் கண்டு களித்த சிலர் அவைகளை அப்படியே படம் எழுது வதும், சிலர் குறிப்புகள் எழுதுவதும், சிலர் புகைப்படங்கள் எடுப் பதுமாகச் செல்கிறார்கள். கண்டாலா ஸ்டேஷனுக்குப் பிறகு பெரிய மலைகளைக் குடைந்த குகைகளும், மலையிலிருந்து ஒரு புறம் தாரை யாயும் ஒருபுறம் சொட்டு சொட்டாயும் ஜலம் விழும் அழகும், வண்டி இருண்டமயமான அக்குகைக்குள் செல்லும் காட்சியும் சுமார் அரை மைல் தூரத்திற்கு நீட்டமான பெரிய குகைள் சிலவும், சிறியவைகள் சிலவும் காண்பதற்கு வெகு நேர்த்தியாயிருந்தன.

இத்தகைய இயற்கையும் செயற்கையும் பொருந்திய வனப்புகளைக் கண்டு மனம் உண்மையிலே களிக்கப்பெற்ற ராஜசேகரன் இவைகளையே வெகு ஊக்கத்துடன் பார்த்துவந்தான். மலைமேல் வண்டி செல்வதும் மீண்டும் பள்ளத்தில் இறங்கிச் செல்லும் விநோதமும் எல்லோருக்கும் ஓர் புதுமையாகத் தோன்றியது. காலை நேரத்திற்கும் சிறு சிறுப்பான காற்றிற்கும் இவ் வியற்கையின் விநோதக் காட்சிக்கும் வெகு மேன்மையாக விருந்தது.

இக் கூட்டத்தினரில் ராஜாவைப் போன்ற பந்தாட்ட வீரர்கள் இருப்பதால் இவர்களைப் போன்ற பம்பாய் வீரர்கள் இவர்களுடைய வருகையைத் தெரிந்து தாமே ரயிலடிக்கு வந்து அழைத்துச் செல்லலானார்கள். எல்லோரும் குறித்த ஜாகையில் இறங்கினார்கள். பம்பாய் பட்டணத்தில் முக்கியமான பல விடங்களை சுற்றிப் பார்க்கத் தொடங்கினார்கள். ஹாங்கிங் கார்டனின் அழகு ஓர் தனித்த தென்றே கூறலாம். மலையின் மேல் ஓர் விநோத அமைப்புடன் கூடிய தோட்டமும், அதிவிசித்திரமான கைத்திறமை வேலைகளும் அருகாமையில் சமுத்திரமிருக்கும் காட்சியும் மனத்தைக் கவர்ந்தன.

அங்கு எல்லோரும் மற்ற சகாக்களுடன் அமர்ந்து ஆநந்தமாக சிற்றுண்டி புசித்துச் சங்கீதம் பாடி மகிழ்ந்தார்கள். பிறகு மியூஸியம் சென்றார்கள். அங்கு புலி, சிம்மம், குரங்கு முதலிய மிருகங்கள் இயற்கையாகவே எப்படி எப்படி மரத்திலும், காடுகளிலும், குகைகளிலும் இருக்குமோ அதே போன்று செயற்கையால் சலர் முதல் அமைத்து உயிருள்ளவை போன்றே ஜோடித்து வைத்திருக்கும் மாதிரி வெகு ஆச்சரியமாக விருந்தன. இவ்வாறே நீர் வாழும் ஜெந்துக்களிலும் சில காணப்பட்டன. பாம்பு முதலிய நகரும் ஜந்துக்களையும் இயற்கையாகவே தோன்றும்படி அமைத்திருந்தார்கள்.

சிற்ப வேலைகளில் சில வெகு திறமையாக விருந்தன. தந்தத்தினாலான சில வேலைகளின் திறமையை வர்ணிக்கச் சாத்யமேயல்ல. இதைப் பார்க்கும் போது நமது வீர வாலிபர்களின் மனத்தில் பண்டைய பாரத நாட்டினரான இந்தியர்களின் மகிமையும், அவர்களுடைய சாமர்த்தியமும் கைத்திறமையின் விசேஷமும் ஒன்று கூடி அபாரமான வியப்பை யளித்தது. இந்தகைய உயர்ந்த கைத்திறமை வாய்ந்த இந்தியர்களின் மரபில் பிறந்த நாம்—பாரத மக்கள்—தற்போது தொழில் முறையை அறவே மறந்து எத்தகைய அடிமைகளாய்—கோழைகளாய்—வறுமையில் சிக்கி வாடுகிறோம் என்ற ஓர் வீர உணர்ச்சியும் இதயத்தில் குபீர் என்றெழுந்தது.

யுவர்களின் கொண்டாட்டம்—யுவதியின் திண்டாட்டம்

தந்தத்தினாலான தாமரை மலர் லக்ஷ்மி பிம்பத்தைப் பார்த்த எந்த நாஸ்திகருக்கும் அம் மலர் மங்கைபால் பக்தி பிறப்பது நிச்சயம். அந்த லக்ஷ்மியின் அழகை எப்படித்தான் உண்டாக்கினானோ என்று அந்த சிற்ப கலைஞனைப் போற்றினார்கள். இந்தியக் கிழவனும் இரண்டு குழந்தைகளும் வெகு இயற்கையாகச் செய்திருந்தான். இதே போன்று ஜப்பான் பெண்மணி, சைனா குடும்பத்துடன் கூடிய ஒரு கூட்டம்; யுத்த வீரனும் அவனைக் கடவுள் ஆசீர்வதிப்பதும், குழந்தைகள் விளையாடுவது, தோட்டம். சிறு கிராமம். வயல் வேலை செய்தல். பெரிய கோபுரம், கோயில், மண்டபம், பசு மாடு கன்று. முதலிய பலவிதமான வேலைகளைச் செய்திருந்ததைக் காணக் கண்களும் மனமும் ப்ரமிப்பை யடைந்தன. சில மணி நேரங்கள் அந்த வேலைத் திறன்களையே பார்த்து மகிழ்ந்தார்கள்.

பிறகு மற்றுமுள்ள புராதனப் பண்டங்களைப் பார்த்துக் கொண்டு வெளியேறினார்கள். மறு தினம் எல்லோரும் ஓர் அழகிய கப்பலை யமர்த்திக்கொண்டு எலிபேண்டா கேவ் (மலைக் குகைக்கு) சென்றார்கள். கப்பல் பிரயாணத்தின் அருமையைக் கூறவேண்டுமா! எல்லோரும் களித்துக் கூத்தாடியவாறு கப்பலின் வராண்டாக்களின் சமீபம் நின்று கடலின் இயற்கை யற்புதத்தைக் கண்டு சந்தோஷத்துடன் பாட்டும் பேச்சுமாகத் தமாஷாகச் சென்று துறைமுகத்தை யடைந்தார்கள். துறைமுகத்திலிருந்து சுமார் ஒன்னரை மைல் தூரம் இரு புறமும் காடுகள் அடர்ந்த விடத்தில் எல்லாரும் வேடிக்கையாக நடந்து சென்றார்கள். மலையின் சமீபத்தில் சென்றதும் மனிதர்கள் சஞ்சாரம் செய்யும் சிறிய வீடுகள், காப்பிக் கடை, தின்பண்டங்கள் கடை முதலியவைகள் இருந்தன. மலைக்குள் சென்று பார்த்தால், அடாடா! அதன் வியப்பைக் கூறவே திறமன்று. ப்ரம்மாண்டமான மலையை எத்தனை பெயர்கள், எத்தனை வருடங்கள், எவ்வளவு கஷ்டப்பட்டு எத்தகைய சாமர்த்தியத்துடன் குடைந்தார்களோ! என்ற வியப்புக் கடலில் மூழ்கினார்கள். ஒரே கல்லில் எத்தனை மத சம்மந்தமான சிலை யுருவங்கள். எத்தனை சித்திர வேலைகள். எத்தனை தூண்கள். ஒவ்வொன்றும் காணக்காணக் கண்கள் பரவசமாயின.

ஒவ்வொரு பிம்பமும் சுமார் 10 அடிக்கு மேல் பட்டதாகவே காணப்பட்டது. ஒவ்வொரு பிம்பத்தின் முகத்திலும் அழகை அள்ளி இரைத்திருந்தது. புன்சிரிப்புடன் சில பிம்பங்களும், வீர தீர பராக்ரமத்துடன் சில பிம்பங்களும், வெகு சாந்தமாகச் சிலவும் காணப்பட்டன. அதற்குள் ஒரு பக்கமாக சுனை யோடிக் கொண்டிருக்கிறது. அதிலுள்ள ஜலமோ, "இது கரும்பின் சாறு: அல்லது தண்

ணீரா?" என்று சந்தேகப்படும்படி அத்தனை ருசியாகவும் ஐஸ் போன்று ஜில்லென்றும் இருந்தது.

இவ் வாலிப சிங்கங்கள் இந்த அற்புதங்களைக் கண்டு களித்துப் பின் தாம் கொண்டுவந்த தின்பண்டங்களை வைத்துக்கொண்டு புசித்துவிட்டு அருவி நீரைக் குடித்து ஆநந்தமடைந்து வெகு நேரம் அவ்விடத்திலேயே இருந்து பின்னர் மீண்டும் உத்ஸாகக் கூத்துடன் கப்பல் யாத்திரை செய்துகொண்டு திரும்பினார்கள். பண்டைய இந்தியர்களின் பெருமைகளை நன்கறிய வேண்டுமாயின் இத்தகைய அத்புத இடங்களே சான்றாகு மல்லவா! ஒரே மலைக் கல்லில் ஒரு உலகத்தையே நிர்மாணித்த சிற்பியின் புத்தி கூர்மையை, விசாலத்தை, நுண்ணிய நோக்கத்தை, உழைப்பின் சக்தியை, வியந்து போற்றாதாரும் உலகிலிருப்பார்களா! இம்மாதிரியான கைத் திறமைகளை நம் பாரத நாட்டில் இன்னும் எத்தனையோ இடங்களில் காணலாம்.

பண்டைய பெருமையைப்புகழ்ந்தபடியே அவர்கள் வீடுதிரும்பினார்கள். இன்னும் மற்ற பார்க்க வேண்டிய இடங்களை எல்லாம் பார்த்துக்கொண்டு மணியூர் என்ற கற்பனை ஊருக்குச் சென்றார்கள். அவர்களுக்கு ஒரு யோசனையும் ஆசையும் தோன்றியது. அதாவது எல்லோரும் அருகில் உள்ள கிராமங்களுக்குக் கால் நடையாகவே செல்லவேண்டும். அவ்வாறு சென்று உண்டாகும் அனுபவங்களை நேரிலறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவ் வாலிப சிங்கங்கள் அப்படியே கிளம்பிவிட்டார்கள்.

182973

அங்ஙனமே காலையில் நல்ல வெய்யில் வரும் வரையில் நடப்பதும் ஓரிடத்தில் சமையல் செய்து சாப்பிட்டுவிட்டு இளைப்பாறி வெய்யில் தாழ நடப்பதுமாக வெகு குதூகலமாகச் செல்கிறார்கள்.

அவ்வாறு செல்கையில் ஒரு கிராமத்தில் ராஜசேகரனுக்கு தந்தி யொன்று கிடைத்தது. அதில் அவனுடைய பாட்டனாருக்கு உடம்பு சரி இல்லை என்றும், உடனே வரும்படிக்கும் கண்டிருந்தது. இவர்கள் கால் நடையினால் அலைவதால் சரியான நேரத்தில் தந்தி சேராமல் இரண்டு தினங்கள் சென்று கிடைத்தது. ராஜசேகரனுக்குப் பிதாவைப் பற்றி அதிகம் தெரியவே தெரியாது. பாட்டனார் தான் தனக்குச் சகலமும் என்று வெகு ப்ரீதியாய் இருப்பவன். அவரிடத்தில் ராஜனுக்கு செல்வாக்கும் உண்டு. ஆகையினால் தந்தியைப் பார்த்தவுடனே விசனத்துடன் ஊருக்குச் செல்லப் புறப்பட்டான்.

தி யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: மதராஸ்.) (1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி—சென்னை அபீஷியல் டிரஸ்டி.

2½ கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள்.
60 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
14 லக்ஷத்திற்கும் மேலாகவே
வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில:—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும், பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ்
பில்டிங்ஸ்.
செம்புதாஸ் தெரு, சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

அமிர்தாஞ்சனம்

நாற்பது
வருஷங்களுக்கு
மேலாக
முன்னணியில்
நிற்கின்றது.

மற்றவைகள்
இதைப்
பின்பற்றித்தான்
வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS,